இலவச வெளியீடு: GERMANY , ENGLAND ஆவணி.Aug.2017

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

1950 (67)

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை
Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany Fax:0231 147836

## வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே!!!




புதுத்தொழில் தொடங்கும் பொழுது பயம் ஏற்படுவது ஏன்?

Dr IN
Page 09

தினமும் அஸ்பிரின்

மிருதங்க அரங்கேற்றம்

S.K.Silks & Gold Paraadise
மாபெரும் ராஜமுத்திரை
15 CELEBRATING
தடம் பதிக்கிறது
கேவலார் அன்னை மரியாவின் திருப்பூசை வளாகத்தில் எமது
12.08.2017 சனிக்கிழமை
மாபெரும் மலிவு விற்பனை!
Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

செல்வராஜா
Selvaraja Gold House
162b,Mitcham Road
London SW17 9NJ U.K
Tel:02087673795
0782500269
Page.02

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 Germany
Page.9

Gopara Gnanam
Textiles & Jewellery Shop Germany
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
Page.Vetti+3

# அன்றும் இன்றும்
# அச்சுக்கலை

**வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன் யேர்மனி**

ஈழகேசரி நா.பொன்னையா அவர்கள் தனது பனைக்காணிகளை விற்று, அந்தப்பணத்தில் கடலில் தரித்து நின்ற சீனக்கப்பிலில் இருந்து கடுதாசிகளைவாங்கி தனது அச்சகத்தின் தரத்தை உயர்த்தியதாகவும் ஒரு கதை உண்டு.

இது வெறும் கதைதானா? அல்லது உண்மையா என்பது தெரியாது? அது கதையோ கற்பனையோ அது இப்போ முக்கியம் அல்ல.

காகிதம் சீனாவில் இருந்து வந்தவை, அவை மிகவும் தரமானவை. அவை அச்சகத்தின் தரத்தை உயர்த்தி நின்றுத்த அதுவும் ஒரு காரணம் என்பதுடன் மட்டும் நிற்போம்.

இப்படியாக அச்சுப்பதிவு நடைபெற்ற காலம் அன்று. கடுதாசிக்கு தங்கத்தின் மதிப்பு அப்போ. அப்போ ஒரு புத்தகம் அடிப்பது என்றால் முதலில் புத்தகம் கையெழுத்தாக எழுதப்பட்டு திருத்தம் செய்யப்பட்டு அச்சகத்திற்கு கொடுப்பார்கள்.

அவர்கள் அங்கு தனித்தனி ஈயத்தில் உள்ள தமிழ் எழுத்துக்களைக் கோர்த்து வாக்கியமாக்கி, அதனை ஒருங்கிணைத்துக் கட்டி அதனை, அச்சுயந்திரத்தில் ஏற்றி அடிப்பார்கள்.





ஒரு தோசைக் கல்லுமாதிரி ஒரு கல்லு ஒன்று, அச்சு இயந்திரத்தில் இருக்கும், அதன் மேல் மையப் பூசவேண்டும். அதன் மேல் ஒரு றோலர் சென்று, அந்தமையைத் தனது றோலரில், பூசிக்கொண்டு வந்து கோர்துத் கட்டிய அந்த எழுத்துப்படிவத்தின்மேல் பூசிச்செல்லும். பின்னர் அந்த எழுத்துப்படிவம் கீழ்நோக்கி வர அதகற்கு இடையில் உள்ள தட்டில், கையால் ஒவ்வொரு காகிதமாக வைத்து வைத்து விட, அதன் மேல் எழுத்து வந்து அடிக்க, அது காகிதத்தில் பதியும். பதிந்த காகிதத்தை ஒரு கையால் எடுத்துக் கொண்டு, மறுகையால் புதிய காகிதத்தை வைக்கவேண்டும்.

இவை நடைபெறும் அதே சமயம் கீழே கால் ஒரு மிதியை உளக்கவேண்டும், (அச்சு இயந்திரங்கள் 1960 களின் பின் மெல்ல மெல்ல காலல் உழக்கி அடித்தல் குறைந்து, மோட்டர் பூட்டப்பட்டு சற்று சுலபமாக்மாக்கப்கட்டது. அப்படி உளக்கும் போது அருகில் உள்ள ஒரு பெரும் சில் மேல் குறிப்பிட்ட அத்தனை தொழில் பாட்டுக்கும் உத்தரவு பிறப்பிப்பது போல் அவற்றை இயங்கவைக்கும். அந்த அச்சுயந்திரத்தின் படத்தை இங்கு காணலாம்.

இந்த அச்சு இயந்திரம், அன்று சிறப்பாக யேர்மனியில் தயாரிக்கப்பட்டவை. அவை கைடில்பேர்க் நகரத்தை சேர்ந்தவை. கைடில்பேர்க் என்று சொன்னாலே அது அச்சுயந்திரம் என்று இன்றுவரை பெயராக உள்ளது. யேர்மனிக்கும் இன்றைய அச்சு யந்திரங்களுக்கும் நிறைய தொடர்பு உண்டு. யேர்மனி தேசத்தைச் சேர்ந்த ஒரு கொல்லன். இவர் பொற்கொல்லனும் ஆவார். இவரது முயற்சியால்தான் ஐரோப்பாவுக்கு அச்சுக்கலை அறிமுகம் செய்யப் பெற்று உச்சம் பெற்றது எனலாம். அவர் பெயர் யோகனஸ் குட்டனபேர்க் (Johannes Gutenberg 1398 1468) was a German blacksmith, goldsmith, printer, and publisher who introduced printing to Europe. )

இந்த இயந்திரத்தில் அடித்து எடுக்கும் போது ஒரு சில பிரதிகளே முதலில் எடுப்பார்கள். எடுத்த அதனை எழுத்துபிழை பார்க்க கொடுப்பார்கள்.




## இந்தியாவில் முதல் முதல் அச்சேறிய மொழி தமிழ்மொழி

அதில் சில எழுத்துக்கள் தேய்ந்து, விசிறி இல்லாமல் இருக்கும், சில ஒரே எழுத்தை பாவிப்பதனால் அந்த எழுத்துக்களுக்குள் மை சென்று காய்ந்து, அந்த எழுத்து தெளிவில்லாமல் இருக்கும், இவற் றை எல்லாம் மாற்றி எழுத்துக்கள் சரி பண்ணி அடிப்பார்கள்.

அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த தினசரி பத்திரிகைகளில் இந்த மை பல எழுத்துக்களை முழுமையாகத் தெரியாவண்ணம் அடைத்திருப்பதை இன்றும் நினைத்துப்பார்க்க முடியும். தமிழ் எழுத்துக்கள் யாவும் ஒவ்வொரு சிறு பெட்டிக்குள் இருக்கும். எழுத்துக் கோர்ப்பவர்கள் கண்ணை மூடிக்கொண்டு கூட அந்த,அந்த,எழுத்தை எடுத்து சேர்ப்பார்கள்.

அந்தளவிற்கு அவர்களுக்கு பரீட்சையம் இந்த எழுத்துக் கோக்கும் வேலையில் இருந்தது. அதாவது நாம் இப்போது கண்ணை மூடிக்கொண்டு ரைப் செய்வது போல் அவர்களுக்கும் அது பழகி இருந்தது.

இந்த உண்மை நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்..

ஒட்டுமொத்த இந்திய மொழிகளில் முதல் முதலில் அச்சுப் புத்தகம்' தமிழ் மொழியில் தான் எழுதப்பட்டது .

அக்டோபர் 20, 1578

'தம்பிரான் வணக்கம்' எனும் கிருத்துவ நூலாகும்




ஒரு புத்தகம் அடிக்க இந்த எழுத்துக் கோர்ப்பவர்கள் பலர் தேவை. ஒரு அச்சகத்தில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இந்த பணிபுரிபவர்களாகவே இருப்பார்கள்.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிடுதல் வேண்டும். உலகில் முதல் முதல் வெளிவந்த தமிழ் பதிப்பு புத்தகம் இந்தியாவில் கேரளாவில் கோலம் என்ற நகரில் வெளிவந்தது. அப்புத்தகத்தின் பெயர் தம்பிரான் வணக்கம் (Christiani Vanakkam') வெளியிட்டவர்கள் (Portuguese missionary) போத்துக்கிச மிஷனரி. வெளியிட்ட ஆண்டு October 20, 1578 .

இந்தியாவில் உள்ள அத்தனை மொழிகளிலும் முதல் அச்சேறிய பெருமை மிக்க மொழி தமிழ்மொழியே என்றால் அது மிகையாகாது.

நன்றி: தமிழர் தகவல் (கனடா) ஆண்டுமலர் 2017

**தொடரும்**






வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 251





ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276


# நீதிபதி இளஞ்செழியனை அழிக்கும் முயற்சி
# தமிழனுக்கு தமிழனே எதிரியான காட்சி!

-அவதானி

நீதியை நிலைநாட்டுவதில் தூய்மையான பணி செய்து வரும் நீதிபதி திரு.இளஞ்செழியன் மீது கொலை முயற்சிக்கான துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதில் இலங்கை மக்களே அதிர்ச்சியடைந்த நிலையிலிருக் கின்றார்கள்.

ஒவ்வொரு தனிமனிதனும் பிறப்பிலிருந்து இறக்கும் வரை அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்காகவே வாழ்நாள் முழுவதும் போராடிக் கொண்டிருக்கிறான். அவனின் நிம்மதியான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிப்பதே நீதித்துறையும் அவனைப் பாதுகாக்கின்ற சட்டங்களுமாகும்

அமைதியாக சுதந்திரத்துடன் வாழ விரும்பும் ஒவ்வொரு தனிமனிதனையும் சட்டம் சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாக்கும் அதே வேளை சமூக விரோதிகளை தண்டிக்கிறது. இலங்கையில் நீதிபதி திரு.இளஞ் செழியனின் வருகை சமூக விரோதிகளை நடுங்க வைக்கின்றது, தொந்தரவு இல்லாத வாழ்க்கையை வாழ விரும்பும் ஒவ்வொரு வரையும் மகிழ்ச்சி கொள்ள வைக்கின்றது. வட மாகாணத்தில் அமைதியை விரும்பாத சில சமூக விரோதிகள் வாள்வெட்டு பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவர்களை நீதி கொண்டு அடக்குவதில் முனைப்பாக இருந்தார். இது சமூக அமைதியைக் குலைக்கும் சமூகப் பயங்கரவாதிகளுக்கு பிடிக்கவில்லை, அதுதான் அவருக்கு விடப்பட்ட உயிர் அச்சுறுத்தல்.

வடக்கில் இளந்தலைமுறையினர் மத்தியில் தமிழக திரைப்படங்களில் வரும் வாள்வெட்டுக் கலாச்சாரமும் வன்முறைச் சிந்தனைகளும் அவர்களிடம் புரையோடிய புண்ணாக மாறிவிட்டது.

மூளையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து மனநிலை பிறழச் செய்யும் கஞ்சா உட்பட போதை மருந்து பாவனை பாடசாலை மட்டங்களில் மிதமாக அதிகரித்த நிலையில் அவற்றை இல்லாது ஒழிக்க நீதிபதி அவர்கள் எடுத்துக் கொண்ட நீதிமூலமான கடுமையான தண்டனைகளும் நடவடிக்கைளும் பாவனையாளர் களையும் கஞ்சா போதைமருந்து வியாபாரிகளையும் நிலைகுலைய வைத்துள்ளது.

அது மட்டுமல்ல புங்குடுதீவு மாணவி வித்தியாவை வன்புணர்வு செய்து கொலை செய்த கொலையாளிகள் மீது நடக்கும் நீதி விசாரணை அவர்களுக்கான கடும் தண்டனையைப் பெற்றுக் கொடுக்கும் நிலையை நோக்கி முன்னேறிச் செல்வதும், விசாரணைகளை நெகிழச் செய்வதற்கான பணமழை மூலம் குற்றவாளிகளை தப்பிக்க வைக்க எடுத்த அனைத்து முயற்சிகளையும் நீதி தவிடு பொடியாக்கி வருவதும் இக்கொலை முயற்சிக்கான காரணமாக இருக்குமோ எனச் சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாண குடநாட்டில் அமைதியான வாழ்க்கையை வாழ்வதற்கும், இரவு பகல் எந்நேரத்திலும் அச்சமின்றி ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சென்று வருவதற்கான உத்தரவாதத்தை நீதி மூலம் நிலைநாட்ட நீதிபதி திரு. இளஞ்செழியன் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். நடுநிசியிலும் பெண்கள் தனித்துச் செல்லும் போதுகூட அச்சமின்றி செல்லும் நிலையை உருவாக்குவதில் கங்கணம்கட்டி நிற்பவர் நீதிபதி அவர்கள்.

விடுதலைப்புலிகள் சமூக விரோதிகளுக்கு சிம்மசொப்பனமாக இருந்து காலத்தை அடுத்து இப்பொழுது நீதிபதி அவர்கள் சிம்மசொப்பனமாக இருக்கிறார்.



நீதிபதி இளஞ்செழியன்



அமரர் ஹேமரத்ன

## காலில் மண்டியிட்டு கண்ணீர் விட்ட முதல் நீதிபதி இளஞ்செழியன்! மனதை நெகிழ வைத்த சம்பவம்

நீதிபதி இளஞ்செழியனுக்கு 17 ஆண்டுகளாக, நம்பிக்கைக்குரியவராக இருந்த மெய்ப்பாதுகாவலர்கள் இருவர் மீது குண்டுகள் பாய்ந்து படுகாயம் அடைந்திருந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிலாபத்தை சேர்ந்த 51 வயதுடைய ஹேமரத்ன என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

நீதிபதியைக் காக்கும் முயற்சியில் தன்னுயிரை இழந்துள்ள மெய்ப்பாதுகாவலரின் மனைவியின் முன்னாள் மண்டியிட்டு அழுத நீதிபதி அவர்கள் தான் நீதி தேவதையால் புடம்போட்டு அனுப்பப்பட்டவன் என்பதை மட்டுமல்ல மனித உயிர் இனம் மொழி கடந்தது என்பதையும் இலங்கை முழுவதும் உணர்த்திவிட்டார், நீதியே அழுதுவிட்டது.



தமிழர்களின் எதிர்காலச் சந்ததியினர் போதை மருந்துகளுக்கு அடிமையாகி எடுப்பார் கைப்பிள்ளைகளாக மாறி சதியாளர்களில் வலைப்பின்னலுக்குள் அகப்பட்டு வன்முறையாளர்களாக மாறி தமிழனுக்கு தமிழனே எதிரி என்ற நிலை உருவாகி வருவது தமிழ் இனத்தையே குழி தோண்டிப் புதைத்துவிடும்.




# ஆண், பெண் இரு பிரிவுகளிலும் முதலாமிடம்

## வடமாகாண தடகளப் போட்டி (உயரம் பாய்தல்) 2017. மகாஜனக் கல்லூரி சாதனை!

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் 06.07.2017 10.07.2017 வரை நடைபெற்று முடிந்த வடமாகாணப் பாடசாலைகளுக் கிடையிலான தடகளப் போட்டி 2017 இல் யா.்.மகாஜனக் கல்லூரி 9 தங்கப் பதக்கங்கள், 11 வெள்ளிப் பதக்கங்கள், 7 வெண்கலப் பதக்கங்கள் என 27 பதக்கங்களைப் பெற்றதோடு ஆண்கள், பெண்கள் என இரு பிரிவுகளிலும் முதலாமிடங்களைப் பெற்று புதிய அத்தியாயத்தை திறந்து வைத்தது.

ஆண்கள் பிரிவில் யாழ் மத்திய கல்லூரியின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்து முதலாமிடம் பெற்றது. மிகவும் பரபரப்பான போட்டியில் இறுதி நிகழ்வுகளில் அபார வெற்றி பெற்று 1 புள்ளி வித்தியாசத்தில் புதிய அத்தியாயத்தை எழுதியது மகாஜன ஆண்கள் அணி.


பெண்கள் பிரிவிலும் யா.்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரியுடன் இறுக்கமான போட்டி காணப்பட்ட போதும், 6 புள்ளிகள் வித்தியாசத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது மகாஜன பெண்கள் அணி. கடந்த வருடமும் மகாஜன பெண்கள் அணியினர் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 10 வருடங்களாக நடைபெற்றுவரும் வடமகாண தடகளப் போட்டியில் ஒரே பாடசாலையைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் அணிகள் இரண்டும் முதலாமிடங்களைப் பெற்றது இதுவே முதற்றடவை ஆகும். இது மகாஜனக் கல்லூரியின் மகத்தான சாதனை ஆகும். இந்த மகத்தான வெற்றிக்காக உழைத்த மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும் பயிற்றுவிப்பாளர்களும் பாராட்டிற்குரியவர்கள்.



ச. ஹெறினா (18 வயதுக்கு உட்பட்ட பெண்கள்) – உயரம் பாய்தல்.

## யேர்மனி சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்தில் "அன்னை கனகதுர்க்கா" இசைத்தட்டு வெளியீடு







படங்கள்.தம்பி.புவனேந்திரன்.நயினை விஜயன்

யேர்மனி சுவற்றா கனகதுர்க்கை அம்பாள் ஆலயத்தில் ஆலய குருக்கள் சிவ ஸ்ரீ ஜெயந்திநாத குருக்கள் அவர்களின் குடும்பத்தார் சார்பில் அம்பாள் புகழ்பாடும் இறுவெட்டுவெளியீட்டு விழா 16.07.2017 ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. கற்றிங்கன் பிரதமகுரு.முத்துசுவாமிகுரு அவர்கள் ஆசியுரை வழங்க, வரவேற்புரையினை ஆலய தலைவர்.சண்முகதாஸ் அவர்கள் வழங்கினார்கள். தொடர்ந்து இறுவெட்டு சிறப்புரையினை பேராசிரியர்.மூரா அவர்களும் நிகழ்த்த இறுவெட்டு வெளியீடு செய்யப்பெற்றது. முதல்பிரதியை தொழிலதிபர். வேங்கைமைந்தன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம்பெற்றன எசன் நுண்கலை அதிபர் நையினை விஜயன், வெற்றிமணி, சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன், Etr. தமிழ் வானொலி அதிபர் அகரம், அகரதீபம் சஞ்சிகை ஆசிரியர் இரவீந்திரன், கலைஞர் கற்றிங்கன் சிவம், கவிமாமணி கி.த.குகதாஸ், ஆலய நிர்வாகசபை உறுப்பினர் சு.கோபிநாத், மாகாண கல்விச்செயல்பாட்டாளர் நற்குணராஜா, ஆகியோர் சிறப்பாக வாழ்த்துரை வழங்க ஏற்புரையை ஆலய குரு.சிவஸ்ரீ.ஜெயந்திநாதக்குருக்கள் பகிர, நன்றியுரையினை கலாதரன் அவர்கள் வழங்க, நிகழ்வினை சிறப்பாக அறிவிப்பாளர்கள் கி.த குகதாஸ், முல்லை மோகன், தேவராஜா ஆகியோர் தொகுத்துவழகினர்.

### யேர்மனி தமிழர் வரத்தக சங்கம் பொதுக்கூட்டம்


காலம்: 10.09.2017 ஞாயிற்றுக் கிழமை
இடம்: டோட்மூண்ட் தமிழர் கலயரங்கம்
நேரம்: 15.00 மணி
புதிய தலைமைப் பொறுப்புகளுக்கான தேர்வு இடம் பெறும்
அனைத்து வர்த்தகர்களும் தவறாது
சமூகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
அன்புடன் ஞானம்
தலைவர்
**யேர்மனி தமிழர் வரத்த சங்கம்**




Bochum
முற்பதிவுக்கு முந்துங்கள்
Lucky Fly Reisebüro
Lucky Fly Reisebüro வழங்கும்
சிறப்பு விலையில் Rail and Fly
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum
Sondertarif Frankfurt -Colombo
Sep,Okt,Nov,Dez,Jan,Feb
Ab : 579 €
Emirates
இந்தியா செல்வதற்கான 1 மாத, 2. மாத, 3. மாத விசாக்கள் பெற்றுத்தரப்படும்
Frankfurt- Colombo
Gulf Air
Allee Str.38-40a
44793 Bochum
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
Email: info@lucky-fly.de
www.Lucky-fly.de
Hinflug: Mi,Do,Fr.
Rückflug :Nur:Di,So.
ab Stunden Transit mit Hotel
6 மணித்தியாலம் Transit ல் செல்பவர்களுக்கு
Hotel தங்குமிட வசதியுடன்
Mob:No: 0179 1484 892
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Graphic Design Vettimaniy Ltd
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
துரித பணமாற்றுச் சேவை!!!
MoneyGram
WESTERN UNION WU
moving money for better


TKS
BEST FOODS
PREMIUM QUALITY
5வது ஆண்டில் காலடி பதிக்கும்
எமது ஸ்தாபனம்
5,000 யூரோ பெறுமதியான
பரிசு பொருட்களை எடுத்துச்
செல்லுங்கள்..!
காலம் : 07.10.2017
அன்று மட்டும்
+49 231 950 468 83 | +49 151 253 004 00
+49 231 950 468 82
info@tks-bestfoods.de | www.tks-bestfoods.de
tksbestfoods | Rheinische Str. 79, 44137 Dortmund

# பொய் பேசும் அறிவியல்?






உங்களிடம் ஒன்று கேட்கிறேன், ஒரு மாதத்தில் நீங்கள் எத்தனைப் பொய்களைச் சொல்வீர்கள்? ஒரு பொய், இரண்டு பொய்கள், ஐந்து அல்லது பத்து பொய்களா? இல்லையென்றால் அவ்வளவு பொய் எல்லாம் பேச மாட்டீர்களா? சரி சரி விடுங்கள், இதற்குப் பதிலை சொல்வதற்கு முதல், நான் இதே கேள்விக்கு அறிவியல் என்ன சொல்கிறது என்று உங்களுக்கு அறியத் தரவா? அறிவியலின் கணிப்புப்படி ஒரு மனிதன் சராசரியாக எத்தனை பொய்களைச் சொல்வான் தெரியுமா? ஒவ்வொருவரும் பேசும் போது பல பொய்களைச் சொல்வார்கள், ஆனால் அதுவே ஒரு தெரியாதவருடன் பேசும் போது, 10 நிமிடங்களில் மட்டுமே சராசரியாக 3 பொய்களைச் சொல்வார்கள் என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். என்ன நண்பர்களே, நம்ப முடியவில்லையா? அடுத்த முறை நீங்கள் யாரும் தெரியாதவர்களுடன் பேசும் போது, இதை அவதானித்துப் பாருங்கள்.

சரி, இது ஒரு பக்கம் இருக்கட்டும், ஆனால் நாம் ஏன் பொய் சொல்கிறோம் என்று உங்களுக்குத் தெரியுமா? காரணம் இது தான்: மனிதன் என்றாலே ஒரு சமூகத்தில் வாழ்ந்து வேறு மனிதர்களுடன் தொடர்பில் இருக்கும் ஒரு உயிரினம் ஆகும். ஒன்று, இந்தச் சமூகத்தில் ஒரு பிரச்சினையும் இல்லாமல் அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ்வதற்குப் பொய்களை சொல்கிறோம், அல்லது இந்தச் சமூகத்தில் இருந்து ஏதாவது நன்மையைப் பெறுவதற்கும் நம்மை மற்றவர்களிடம் இருந்து உயர்த்திக்கொள்ளவும் பொய்களைச் சொல்கிறோம். எனவே, சிறு வயதிலேயே பொய் சொல்வதையும், பிறர் பொய் சொல்வதைக் கண்டுபிடிப்பதையும் கற்றுக்கொள்ள ஆரம்பித்து விடுகின்றோம். சிறு வயதில் பொய் பேச ஆரம்பிக்கின்றோம் என்றால் எந்த வயதில் தெரியுமா? பிறந்து ஆறு மாதங்களில் நாம் பொய் சொல்லத் தொடங்கி விடுகின்றோம்! அடடா, இது என்னடா புதுக் கதையாக இருக்கிறது என்று யோசிக்கிறீர்களா? நீங்கள் நிச்சயமாகச் சிறு குழந்தைகள் காரணம் இல்லாமல் பெற்றோர்களின் கவனத்தை தங்கள் பக்கம் திருப்புவதற்காக அழுவதைக் கவனித்து இருப்பீர்கள், சரி தானே? இப்படி அழும் போது திடீரென்று அழுகையை நிறுத்திவிட்டு யாராவது தன்னை கவனிக் கின்றார்களா என்று பார்த்து, மறுபடியும் அழுவது கூட ஒரு விதமான பொய் தானே? சரி கைக்குழந்தைகள் இப்படிப் பொய் சொல்வார்கள், இதுவே பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் எத்தனைப் பொய்களைச் சொல்வார்கள் தெரியுமா? இந்தப் பிள்ளைகள் அவர்களின் பெற்றோர்களுடன் பேசும் போது சராசரியாக ஒவ்வொரு ஐந்தாவது வசனத்திலும் ஒரு பொய் இருக்கும் என்று விஞ்ஞானிகளால் கூறப்படுகிறது.

உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா நண்பர்களே? பொய் பேசுவது என்பது நமது மூளைக்கு ஒரு மிகவும் கஷ்டமான விஷயம் ஆகும். எனவே பொய் சொல்பவர்களை இலகுவாகக் கண்டு பிடித்து விடலாம், ஏனென்றால் பொய் சொல்லும் போது அவர்கள் ஒரு விதமான மன அழுத்தம் கொண்ட நிலையுடன், இருதயம் வேகமாகத் துடித்து, வியர்த்து, பேச்சில் தடுமாற ஆரம்பித்து விடுவார்கள். மேலும் அவர்களின் உடலின் நிலை, சைகைகள், கண்ணின் அசைவுகள் மற்றும் அவர்கள் உபயோகிக்கும் வார்த்தைகளை வைத்துப் பொய் சொல்வதைக் கண்டுபிடிக்கலாம். இது ஆச்சரியமாக இல்லையா? சரி, பொய் சொல்பவர்களை எப்படிக் கண்டுபிடிக்கலாம் என்று கூறிவிட்டேன். நான் பேசுவதைப் பார்க்கமுடியவில்லை என்றாலும், என் எழுத்தைப் பார்த்து இந்தக் கேள்விக்கு பதில் கூறிவிடுங்கள் பார்ப்போம். எனது இந்த சிறு கட்டுரையில் கூட நான் ஒரு பொய் சொல்லி இருக்கிறேன். அது என்ன பொய்? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

Dr.நிரோஷனின்
அதிசய உலகம்



சேவண்ட் குறைபாட்டினால் ஞானி ஆகமுடியுமா?




பெரும் விபத்து ஒன்று நடந்தால் கூடுதலாக ஒருவரின் வாழ்க்கையே எதிர்மறையாகிவிடும் என்பது உண்மை தானே? ஆனால், Derek Amato என்பவருக்கு நடந்த விபத்தினால் அவரின் வாழ்க்கையில் ஒரு பெரும் அதிசயமே நடந்துவிட்டது. அது என்ன அதிசயம் என்று தெரியுமா? நீச்சல் குளத்தில் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டு இருந்த இவர், தடுமாறிக் கீழே விழுந்து அவரின் தலையில் பலமாக அடிபட்டது. உடனடியாக மருத்துவ மனையில் சிகிச்சை செய்யப்பட்டது. இதில் என்ன ஆச்சரியம் தெரியுமா? இவரின் மூளையில், நாட்கள் போகப் போக பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன. அது என்ன மாற்றம் என்றால், அவரது மூளையில் காணப்படும் நரம்பணுக்கள் அதாவது Neurons புதிதாகச் சீரமைக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட நம்ப முடியாத விளைவு என்ன தெரியுமா? இந்த விபத்து நடைபெறும் வரை ஒரு துளி இசை ஞானமே இல்லாத Derek Amato ஒரு நொடியிலே பியானோவில் ஒரு இசை மேதை ஆகிவிட்டார்.

இவ்வாறு விபத்தால் மட்டும் இல்லை, வேறு விதமாகவும் மூளையில் பாதிப்பு ஏற்பட்டு அதன் விளைவாக ஒரு விடயத்தில் அதிசயமான திறன் ஏற்படும் நிலையை சேவண்ட் குறைபாடு (savant syndrome) என்று அழைப்பார்கள். இந்தக் குறைபாடு உலகில் ஏறத்தாழ 100 பேரில் தான் காணப்படுகிறது. இசைத் திறன் தவிர்த்து வேறு சேவண்ட் குறைபாடு உள்ளவர்கள் கணிதத்தில், ஞாபக சக்தியில், காட்சிக் கலையில் அல்லது பல விதமான வேற்று மொழி பேசுவதில் திறன் உடையவர்களாக இருப்பார்கள். உதாரணத்திற்கு Orlando Serrell என்பவர் இன்றுவரை தனது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நடைபெற்ற ஒவ்வொரு சிறிய சம்பவத்தையும் நினைவில் வைத்திருக்கிறார். Kim Peek என்பவர் தான் படித்த 12.000 புத்தகங்களில் உள்ள அனைத்துச் சொற்களையும் மற்றும் வாக்கியங்களையும் மனப் பாடம் செய்து வைத்துள்ளார்.

Richard Wawro என்பவர் எதைப் பார்த்தாலும் அதை உடனடியாக ஒரு சிறிய பிழை கூட விடாமல் வரையக் கூடியவர் ஆவார்.
ஆனால், என்ன தான் இவர்கள் ஒரு விஷயத்தில் உலகில் வாழும் அனைத்து மக்களையும் விடத்திறமைசாலியாக இருந்தாலும், அவர்களுக்கு ஏனைய விடயங்களில் ஒரு குறை இருக்கின்றது. மூளையில் ஏற்பட்ட பாதிப்பினால் இவர்களுள் பெரும்பாலானவர்கள் மனவளர்ச்சிக் குறை உள்ளவர்களாகத் தான் இருப்பார்கள். எனவே, இது கவலைக்கிடமான ஒரு விஷயம் தான்.

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**
ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளோம்
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de

## யேர்மனி – போகும் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள்

# தாயகத்தில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு உதவி!





Ruhr-Universität Bochum (RUB) பல்கலைகழக மாணவர்கள் ஒரு சிறந்த முயற்சியில் இறங்கி யுள்ளார்கள். RUB என அழைக்கப்படும் பல்கலைக் கழகத்தில் சுமார் 42.427 மாணவர்கள் படிக்கின்றனர், இதில் 100க்கு மேல்பட்டவர்கள் தமிழ் மாணவர்களாவர். இப்பெரிய பல்கலைகழகத்தில் தமிழ் மாணவர்கள் ஒருவருக்கு ஒருவர் தொடர்பில் இருப்பது குறைவு.

இதை மாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் சில மாணவிகள் இணையத்தின் வளர்ச்சியை உபயோகித்து முகநூலில் ஒரு குழுவை தோற்று வித்தார். பின்பு சிலர் இணைந்து 'Deutsch-Tamilische Studierende Bochum' (DTSB, ஜேர்மன்-தமிழ் மாணவர்கள் போகும்) என்ற சங்கத்தை தோற்றுவித்தார். இச்சங்கத்தின் நோக்கம் தமிழ்ப் பண்பாடு, மொழி, ஆடை, உணவு போன்றவற்றை மற்றய நாட்டவர்களுக்கு எடுத்துக் காட்டுவதும், நம்மவர்க்கு அதன் சிறப்பை உணர்த்துவதும் ஆகும். இச்சங்கம் பல்கலைக்கழக மாணவர்களுக்காக மாத்திரம் அமைக்கப் பட்டது.



RUB இல் நடக்கும் கோடைகால கொண்டாடத்தில் ஒரு விளம்பர குடில் நடாத்த வேண்டும் என்று ஒரு முடிவை இவ் மாணவர்கள் எடுத்தார்கள். 16 மாணவர்கள் இணைந்து இரண்டு வாரத்தில் இதை செய்து முடிக்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கினர். பல ஆண்டுகளாக ஜேர்மனியில் சேவையாற்றும் தமிழ் உணவகம், மற்றும் ஆடைமாளிகைகளின், உதவி நாடி சென்றார்கள். உதவி செய்ய பலர் முன்வந்தார்கள்.

ஜேர்மன் நாட்டில் பிறந்து வளர்ந்த இம் மாணவர்கள் எமது தமிழ்ப்பண்பாட்டை ஜேர்மன் நாட்டவருக்கு காட்ட மாத்திரம் விரும்பவில்லை, தமிழ் உணவும் குளிர்பானங்களையும் விற்று அதில் வரும் வருவாயை முழுதாக தங்கள் தாய்நாட்டில் வாழும் கஷ்டப்பட்ட தமிழ்ச் சிறார்களுக்கு நன்கொடை செய்ய வேண்டும் என்ற முடிவுடன் இருந்தார்கள்.

இதை ஆதரித்து Amma's Food, Curry Masala உணவகங்கள் உணவுதவியையும், Star impex TKS Bestfoods, TTS Brothers, Kailas - Fisch - Feinkost குளிர்பான உதவியையும், Indisches Restaurant Namaste, Baguetteria Mare, Kiosk Nava பண உதவியையும் S.K.Silks, K.K.L.Textiles பொட்டு, நகை, மருதாணி போன்றவையையும் கொடுத்தார். அத்துடன் மாணவர்களின் பெற்றோர் சிற்றுண்டிகளை செய்து கொடுத்தார்.

14-06-2017இல் RUB இல் நடந்த கோடை கொண்டாடத்தில் இவர்கள் வெற்றிகரமாக தமிழ் உணவை விற்றார்ரகள்.

அத்துடன் இலவசமாக மற்ற நாட்டு மாணவர்களுக்கு மருதாணி, சேலை, வேட்டி போன்றவையை போட வாய்ப்பு கொடுத்தார்கள். விரும்பினோர் அதர்க்கு SOFT அமைப்பின் நன்கொடை பெட்டியில் தங்களுக்கு விரும்பிய தொகையை செலுத்தி, மகிழ்ந்தார்கள். பண உதவி மூலம் 700€ வும், விற்பனை மூலம் 1126,50 € வும் , நன்கொடை பெட்டியில் 120 € வும் சேர்த்து மொத்தம் 1946,50 € இவ்மாணவர்கள் சேர்த்துள்ளார். இதில் 1520€ ஐ மொத்தமாக SOFT என்ற Göttingen மற்றும் Kassel தமிழ் மாணவர்களால் அமைக்கப்பட்ட நன்கொடை அமைப்பின் உதவியுடன் ஈழத்தில் வாழும் தமிழ் சிறார்களின் படிப்புக்கு தேவையான உதவிகளை செய்ய உபயோகிக்கப் போறார்கள். இது பாராட்டுக்குறியது.

இவ் முயற்சியில் ஈடுபட்டோர்: பிரியங்கா சுந்தரமூர்த்தி, சிவன்யா சிவநேசன,,ராமதுளசி சிறிமுருகன், அரங்கதாரணி தம்பிராஜா, ஆகித்தியா சோதிநாதன், தர்சினி நவரத்தினராஜா, வினுசியா அரசரட்ணம், நவனீஞா கணேஸதாசன், தக்சனா மோகனதாஸ், ஜெனுயா சிவநேசன், ரிமேஸ் யேசுராயா, அமிதாப் மகேஸ்வரன், கௌசல்யன் நவரட்ணம்,,மிதுனன் சிவநாதன், வினுசனன் சிறீமுருகன், ரொணிஷ் பற்ரிமா.

இவ் மாணவர்களின் முயற்ச்சிகளுக்கு எங்கள் பாராட்டுக்கள். இவர்களின் நிகழ்ச்சிக்கு உதவி செய்த அனைவருக்கும் எங்கள் நன்றிகள். இச் சங்கம் எதிர்காலத்தில் எடுக்கும் முயற்சிகளை காண ஆவலுடன் உள்ளோம். இச் சங்கத்தில் இணைய விரும்பும் அனைத்து மாணவர்களும் இவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: fb.me/DeutschTamilischeStudierendeBochum
dt.studenten.bochum@gmail.com

**யேர்மனியில் தங்க நகை வியாபர நிலையம் விற்பனைக்கு உண்டு**

யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் **Rheinische Str 80** இல் அமைந்துள்ள சிறந்த **தங்கநகை வியாபர நிலையம்** விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: 0171 330 6542**



**சிவ பார்வதி ஜோதிட நிலயம்**

**SHIVA PARVATI ASTROLOGY CENTRE**

சோதிட துறையில் 9 வது சந்ததியினரும்
உலகப் புகழ் பெற்ற சோதிட, கைரேகை நிபுணர்
பண்டித் காளிதாஸ்
**Pandith Kallidas**

உங்கள் பிரச்சினைகளுக்கு
உடனடி ஆலோசனையும் தீர்வும்
நீங்கள் நீண்டகால நோய்யால்
அவதியுறுகின்றீர்களா?
கல்வி, வேலை, வாய்ப்பு பிரச்சினைகள்,
காதல் விவகாரங்கள்,திருமணம்,கணவன்
மனைவி உறவு, பணம் செலவு, காணி

வழக்குகள், உடல் நோய்கள், பிள்ளைப்பேறு,
எந்த விதமான பிரச்சினைகளாக இருந்தாலும்
தீர்வு காணப்படும்.100 வீதம் தீர்வு
உத்தரவாதம் இன்றே எம்மைக்காண
நேரத்தைப் பதிவு செய்யுங்கள்





தெடார்பு மொழி:
தமிழ் கிந்தி ஆங்கிலம் கன்டம் தெலுங்கு


வாரத்தில் 7 நாட்களும்
காலை 9:00 மணி முதல் மாலை 6:00 வரை

**Pandith Kallidas**
**Wilhelm Str.27**
**59067 Hamm**
**+49(0) 151 44 921 486**
**+49(0) 152 15 670 175**

# இது எங்களுடையது இதை நாம் [இப்படியே] பாதுகாப்போம்







இது எங்களுடையது இதை நாம் பாதுகாப்போம் என்ற வாக்கியத்துடன் யாழ்தேவி கல்கிசையில் இருந்து புறப்பட்டது.
இது அதிகாலை 5.00 மணிக்குப் புறப்படும் கடுகதி அல்ல. இது அதற்கடுத்தால் போல் 5.15 புறப்படும் யாழ்தேவி. இது வவுனியாவிற்கு அப்பால் எமக்கு ஒவ்வொரு கிராமத்தையும் காட்டி அங்கு தரித்து தரித்துச் செல்லும்.
இந்த யாழ்தேவியில் குளிர் ஊட்டப்பட்ட வகுப்பறை கிடையாது. குளிர் ஊட்டப்பட்ட வகுப் பறையில் சென்றால் பழைய யாழ்தேவியில் சென்ற அனுபவம் கிடைக்காது என்பதனால் இந்த யாழ்தேவி என மனதுக்குத் தெரிவானது.

யாழ்ப்பாணம் பி.பகல் 3.40 அளவில் சென்று அடையும்.
பாதை புதிது பயணம் பழசு. இது சிறுகதையின் தலைப்பு அல்ல! நான் சென்று கொண்டிருக்கும் பயணத்தைக் குறிப்பது. ஆம் தண்டவாளம் புதுசு புகையிரதம் பழசு. நான் நினைக்கின்றேன் அன்று 1969 களில் பயணித்த அதே புகையிரதமாகத் தான் இது இருக்கும்.
இருக்கைகளில் நம் தாத்தா காலத்தில் பொறிக்கப்பட்ட (எழுதப்பட்ட) காதலர் பெயர்கள் அவர்கள் இல்லாத போதும் அவை வாழ்ந்து கொண்டே இருக்கின்றன.
எமது தலைக்கு மேலே சுழலும் மின்சார விசிறி. சந்தேகமே இல்லை அது 1969 ஆண்டு எமது தலைக்கு மேல் சுற்றியதுதான். புகையிரதம் வெளிநாட்டில் இருந்து கொள்வனவு செய்தபின் எக்காரணம் கொண்டும் துப்பரவு செய்ப்படாத மின்விசிறியாகவே தெரிந்தது.

காலைத் தூக்கி எங்கு வைப்பது என்ற தடுமாற்றம். காலுக்கடியில் கிழிந்த நிலப்பரப்பும் அழுக்கும். இந்த நிலத்தில்தான் நாம் முன்பு பழைய விரகேசரியை விரித்துப்போட்டு படுத்துச் சென்றோம்!!! உண்மையைச் சொன்னால் அன்று நிலம் அழகாக புதிதாகச் சுத்தமாகவே இருந்தது.

கட்டிச் சென்ற உணவை விரித்து சாப்பிட முடியவில்லை. எமது இருக்கைக்கு அருகால் ஓடும் கூவம் நதி. அது உற்பத்தியானது இமையத் தில் அல்ல. புகையிரதத்தில் உள்ள மலசல கூடத்தில்தான்.



மலசலகூடம்

## மலசழகூடம்

புதிய தண்டவாளம். அதில் போகும் புகையிரதம் இன்னும் பழையது ஏன். சரி பழையது என்றாலும் அதனை அழகாக திருத்தலாமே. யாழ்ப்பாணத்தில் நாம் பாடசாலைக்கு சிறுவயதில் சென்ற கார்கூட இன்றும் அழகாக பொடியடித்து, பூச்சூடி, பொட்டுவைத்து நிற்கும் போது, ஒரு அரசால் இதனைத் திருத்தி, திருப்தியளிக்க முடியாதா? அல்லது யாழ்தேவி பெரும்பாலும் தமிழர் அதிகளவில் பயணிப்பது. எனவே தமிழனுக்கு தேவை இல்லை இது போதும் என்ற நினைப்போ தெரியவில்லை.

இப்போது மீண்டும் அங்கே எழுதப்பட்டிருக்கும் வாக்கியத்தைப் பார்க்கின்றேன். இது எங்க ளுடையது இதை நாம் பாதுகாப்போம் என்று இருந்தது.
எனது கை துடித்தது....

அதனை இப்படி மாற்றி எழுத......
**" இது எங்களுடையது இதனை இப்படியே பாதுகாப்போம்"**

அதாவது திருத்தாமல் துப்பரவு செய்யாமல் இருப்பது போலவே பாதுகாப்போம்.
பி.குறிப்பு. கற்பிணிப் பெண்கள் இந்தப் புகையிரதத்தில் செல்ல வேண்டாம். புகையிரதம் தரித்து நின்று விட்டு எடுக்கும்போது கற்பிணிப் பெண்களின் கருச்சிதைய நிறையவே வாய்ப் புண்டு. அவ்வளவு பேரிடியுடன் இரு பெட்டிகளும் மோதிவிட்டே புறப்படும்.

**ரிதன்**





Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com






# புதுத்தொழில் தொடங்கும் பொழுது பயம் ஏற்படுவது ஏன்?

எல்லோருக்கும் பயம் என்பது வாழ்க்கையின் எல்லாத்தரணங்களிலும் ஏற்படுகின்றது. பயம் ஏற்படுவது மனித இயல்புதான். பயத்தைத் தாண்டி வெளியே வரும்பொழுதுதான் வெற்றிபெற வாய்ப்புக்கள் இருக்கின்றன.

தொழில் தொடங்கும் போது பயம் ஏற்படுவதற்கான முக்கிய காரணம், வெற்றி பெறுவோமா? தோல்வி அடைந்து விடுவோமா என்ற எண்ணம், தொழில் மீது எமக்கு இருக்கும் சந்தேகம், பக்கத்தில் உள்ளவர்கள் என்ன சொல்கின்றார்கள் என்ற எண்ணம். இவ்வாறான மனநிலையுடன் இருக்கும் பொழுது தொழில் தொடங்கப் பயம் ஏற்படுவது சகயம் தான்.

நீங்கள் தொழில் தொடங்க எடுத்துவைக்கும் முதல் அடிதான் பயத்தைக் கடப்பதற்கான முதல் வழி.

நிறைய மிருகங்கள், பூச்சிகள் போன்ற இயற்கை சார்ந்தவைகள் எமக்கு நிறைய தொழில் கருத்துக்களை சொல்லிக் கொண்டு இருக்கின்றன. வண்ணத்துப் பூச்சியில் கூட பல சிந்தனைகள் உண்டு. தாய் முட்டையை இட்டு விட்டுச் சென்றதும் அதில் இருந்து கம்பிளிப்புழு வெளிவருகின்றது. வெளிவரும் கம்பிளிப் புழு தனது முட்டையின் மீதிச் செல்களை உண்டுவிட்டு, தனது வாழ்க்கையை ஆரம்பிக்கின்றது. பின்னர் பல மாற்றங்கள். தடங்கல்கள் என்பனவற்றிற்கு பின்னர்தான் அழகான வண்ணத்துப்பூச்சியாக வருகிறது. அழகான வாழ்வும் அமைகிறது.

கடந்த சில வருடங்களில் உலகில் சிறந்த வெற்றிபெற்ற தொழில் அதிபர்கள் கூறிய வெற்றிக்கான முக்கிய விதிகள் ஆலோசனைகள், என்பவற்றை கீழே பார்க்கவும்.

### ALAN SUGAR

முதல் முதலாக Amstrad என்ற computer இங்கிலாந்தில் அறிமுகம் செய்த தொழிலதிபரின் கருத்தாகும்.
பின்னடைவுக்குத் தயாராக இருங்கள். உங்கள் திட்டத்தில் நம்பிக்கை, நோக்கத்தில் உறுதி, இருந்தால் வெற்றி நிச்சயம்.
உங்களுக்கு அனுபவம் இருக்கும் விடயத்திலேயே தொழிலைத் தொடங்கவும்.
இது நீங்கள் ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்ததன் மூலம் பெற்றிருக்க முடியும். அல்லது தங்களது பொழுதுபோக்கின் பொழுது கிடைத்ததாக இருக்கலாம்.
உங்கள் தொழில் சார்ந்த வல்லுனர்களிடம் அறிவுரை கேளுங்கள். நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ கேட்டால் அவர்கள் உங்களுக்கு பிடிக்கும் மாதிரியான அறிவுரை மட்டுமே கூறுவார்கள்.
சிறிதாக ஆரம்பிக்கவும். நடக்கும் முன் ஓட முயற்சிக்க வேண்டாம்.
தொழிலில் உங்களுக்கான தனித்துவமான பாணியினைக் கண்டு பிடியுங்கள். அவை புதியதாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் செய்யும் விடையத்தைச் சிறந்ததாகச் செய்யுங்கள்.

Mukesh Ambani கூறிய கருத்துக்கள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
ரிஸ்க் எடுப்பதில் இருந்து மிகச் சிறந்த பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்.
வெற்றியின் மீது எப்பொழுதும் ஆவல் கொண்டிருங்கள்.
உங்கள் உறுதியான உள் உணர்வுகளை நம்புங்கள்.
உங்கள் பார்வையை விசாலமாகத் திறந்து வையுங்கள்.

### Jack Ma

இவர்தான் China வின் Alibaba என்ற நிறுவனத்தை ஆரம்பித்தவர். ஆவர் தெரியப்படுத்தும் சில கருத்துக்கள்.
முதலில் வாடிக்கையாளர்கள், பிறகு ஊழியர்கள், மூன்றாவதுதான் முதலீட்டாளர்கள்.
குறை காணாதீர்கள் அதில் உள்ள வாய்ப்புக்களைப் பார்க்கவும்
உங்கள் கனவின்மீது தீராத வெறியைக் கொண்டிருங்கள்.
நிறுவனத்திற்கு நல்ல பெயர் இருப்பது முக்கியம்.
உங்கள் தீர்வு வெற்றியடைய மாட்டாது, முட்டாள்தனமானது, என எவர் கூறினாலும் ஏற்றுக்கொள்வேண்டாம்.

### JEFF BEZOS

இவர்தான் Amazon நிறுவனத்தின் Chief Executive officer மற்றும் அதனை ஆரம்பித்தவரும் கூட. அவரின் சில ஆலோசனைகள்.

வாடிக்கையாளர் மீது கவனம் செலுத்த வேண்டும்.
நீங்கள் எடுத்த முடிவிற்காக வருத்தப்படாதீர்கள். அதனால் தோல்வி. ஏற்பட்டாலும் முயற்சியை கைவிடவேண்டாம்.
உங்கள் இதயத்தைப் பின்பற்றுங்கள் மூளையை அல்ல.
தங்களது நிறுவனத்தில் கலாச்சாரத்தை உருவாக்குங்கள்.

### Elon Musk

இவர்தான் TESLA கார் நிறுவனத்தின் CEO

நிறுவனத்திற்கு சிறந்த திறமையான மனிதர்களைத் தேர்ந்தெடுங்கள்.
தோல்வியை விருப்பமானதாக்குங்கள். நீங்கள் தோல்வியடைய விருப்பம் இல்லை என்றால் புதுமையாக எதனையும் சாதிக்க இயலாது.
வளர்ந்து வரும் துறையில் வாய்ப்புக்களைத் தேடுங்கள்.
இந்த உலகத்தில் உள்ளதைத் தாண்டி யோசியுங்கள்.

### SAM WALTON

Wall Mart நிறுவனத்தின் முக்கிய காரணகர்த்தா இவர்தான். இவரின் கருத்துக்களைப் பார்ப்போம்.
வணிகத்துறையில் பெரியதாக வெற்றி ஜெயிக்க வேண்டும் என்றால் எமது இலாபத்திற்கு மட்டுமன்றி வாடிக்கையாளர்களது இலாபத்திற்காகவும் செயல்படவேண்டும்.
நாம் நம்முடைய பழைய சாதனைகளில் திருப்தியடைந்து மகிழ்ந்து விட்டால், நாம் அங்கேயே தேங்கி நின்றுவிடுவோம். அதை மறந்துவிட்டு அடுத்து என்ன என்னும் ஆர்வத்துடன் அணுகினால் இன்னும் மேலே செல்லமுடியும்.

பணமும் வெற்றியும் நமக்கு கிடைக்கும் பொழுது அதோடு சேர்த்து பொறாமையும், வெற்றியடைய முடியாதவர்களிடம் இருந்து வரும். அந்த இயலாமையை காட்ட நம்மைப்பற்றி பலவிதமாக பேசுவார்கள், அதனை எல்லாம் பொருட்படுத்தாது நமது வெற்றிப்பயணத்தை தொடரவேண்டும்.




Kaneen Electronics
புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள்,
வியாபார ஸ்தாபனங்களுக்கு
தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை
பொருத்த சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள்
புதிய சட்டத்திற்கமைய வியாபார ஸ்தாபனங்களுக்கு சட்டபூர்
Barcode Kasse பொருத்துவதற்கும், சகல Smart TV, Alarm,
Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet, கருவிகளை
பொருத்துவதற்கும், சகல மங்கள நிகழ்வுகளையும் Video ஒளிப்பதிவு
செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்பு
செய்வதற்கும் Lyca IP-TV Box ஐபெற்றுக்கொள்வதற்கும்.
www.kaneenelectronics.de
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal



Dr. IN

# தினமும் அஸ்பிரின்- சர்வரோக நிவாரணியின் மறுபிறப்பு

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்


காய்ச்சலா, தலையிடியா, உடல் உழைவா, மூட்டு வலியா எதுவானாலும் அஸ்பிரின் மருந்துதான். இவ்வாறு அது கைகொடுத்த காலம் ஒன்று இருந்தது.

ஆம் சர்வரோக நிவாரணி போலப் பயன்பட்டது. ஆனால் வலியைக் குறைக்கவும், காய்ச்சலைத் தணிக்கவும் வீரியம் கூடியதும், பக்க விளைவுகள் குறைந்ததுமான புதிய மருந்துகள் வந்ததும் அதன் பிரபல்யம் மங்கத் தொடங்கியது.
ஆனால் அதற்கு சென்ற சில ஆண்டுகளாக மீண்டும் மவுசு கூடிவிட்டது. மறுபிறப்பு எடுத்துவிட்டது.

ஆம்! 'தினமும் அஸ்பிரின் சாப்பிட்டு வாருங்கள்' என வைத்தியர்கள் சிபார்சு செய்பவர்கள் தொகை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

யாருக்கு இது தேவை?

மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆபத்தான நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியத்தைக் குறைக்கும் ஆற்றல் இருப்பதால்தான் மருத்துவர்களால் அதிகம் எழுதப்படும் மருந்தாக அஸ்பிரின் மாறிவிட்டது.



ஒருவருக்கு மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்கனவே வந்திருந்தால் அது மீண்டும் வராமல் தடுப்பதற்கு தினமும் அஸ்பிரின் எடுக்க வேண்டியதாக உள்ளது. அது மட்டுமல்லாமல் பக்கவாதம் அல்லது மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளவர்களுக்கும் தேவைப்படுகிறது.
இவை வருவதற்கான சாத்தியம் அதிகமுள்ளவர்கள் யார்?

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், குருதியில் கொலஸ்டரோல் அதிகமுள்ளவர்கள் ஆகியோருக்கு அதற்கான சாத்தியம் மிக மிக அதிகமாகும்.
புகைப்பவர்கள், தினமும் அதிகமாக மது அருந்துபவர்கள், அதீத எடையுள்ளவர்கள், உடலுழைப்பு உடற் பயிற்சி அற்றவர்கள், பரம்பரையில் மாரடைப்பு, பக்கவாதம் உள்ளவர்கள் ஆகியோருக்கும் சாத்தியம் அதிகமாகும்.
அஸ்பிரின் எவ்வாறு உதவுகிறது?







## "அஸ்பிரின் தடுப்பு மருந்தாக"

அஸ்பிரின் மருந்தானது குருதியின் உறைதல் (Clotting) தன்மையைக் குறைக்கிறது. உதாரணமாக ஒருவருக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது என வைத்துக் கொள்வோம். உடனடியாக இரத்தம் கசியும் இடத்திற்கு வெண்குருதி சிறுதுணிக்கைகள் (Platelets) வந்து குவியும். இவை திரண்டு, இரத்தத்தை கட்டிப்படுத்தி, கசிந்து கொண்டிருக்கும் இரத்தக் குழாய்களின் வாயிலை அடைத்து மேலும் இரத்தம் வெளியேறுவதைத் தடுக்கும்.

ஆனால் இவ்வாறு குருதி உறைந்து கட்டிபடுதல் இரத்தக் குழாய்களுள்ளும் ஏற்படலாம். முக்கியமாக மூளைக்கும், இருதயத்திற்கும் குருதியைக் கொண்டு செல்லும் இரத்தக் குழாய்களுள் ஏற்பட்டால் அது ஆபத்தானது. கொலஸ்டரோல் காரணமாக அவை இரத்தக் குழாய்க்குள் படிந்து அவற்றின் இரத்தம் பாயும் பாதையை ஏற்கனவே ஒடுங்கச் செய்திருந்தால், அங்கு குருதி உறைந்து கட்டிபட்டு இரத்த ஓட்டத்தை தடைப்படுத்தும்.

அவ்வாறு அடைபடும் போதுதான் மாரடைப்பு, பக்கவாதம் ஆகியன ஏற்படுகின்றன. அஸ்பிரின் மருந்தானது அவ்வாறு இரத்தம் உறைந்து மாரடைப்பு, பக்கவாதம் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கின்றன.

எவ்வளவு அஸ்பிரின் தேவை?

வழமையான அஸ்பிரின் மாத்திரைகள் 300 மிகி (300 milligrams (mg) அளவுடையவை. ஆனால் மாரடைப்பு பக்கவாதம் ஆகியவற்றைத் தடுப்பதற்கான மாத்திரைகள் 75 மிகி முதல் 100 மிகி வரையானவை மட்டுமே. இது அந்தத் தேவைக்கு போதுமானதாகும்.

இவற்றிலும் வெவ்வேறு வகைகள் உள்ளன.

இரைப்பையில் கரையாது அப்பால் சென்று உணவுக் குழாயில் கரைவதை Enteric-coated aspirin என்பார்கள். இது முக்கியமாக இரைப்பை புண் உள்ளவர்க்ளுக்காகும். இரைப்பையை உறுத்தாது அப்பால் சென்று கரைய வைப்பதன் மூலம் பாதுகாப்பு அளிக்கிறது. ஆயினும் இது சமிபாடடைந்து செயற்படுவதற்கு கூடிய நேரம் எடுக்கிறது. அத்துடன் இரைப்பையை உறுத்தாது என்ற போதும் இரைப்பை புண்ணிலிருந்து இரத்தம் கசிவதைக் குறைக்குமா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

வேறு சில வாயில் வைத்துக் கரையவிடக் கூடியனவாக இருக்கின்றன. இவை விரைவில் உறிஞ்சப்பட்டு விடும்.

சத்திர சிகிச்சைகளும், நிறுத்துவதும்

தொடர்ச்சி 10ம் பக்கம்

TTS ASIEN SUPERMARKT
TTS Brothers GmbH & Co.KG
★ Lebensmittel ★ Seafood ★ Textilien ★ Schmuck
Germany நாட்டில் 25 ஆண்டுகளைக் கடந்த ஒரே நிறுவனம்

உங்கள் வீட்டுத் தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள் மற்றும் ஆடை அணிகலன்களுக்கும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!


RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184
Helmholtz Str 11 | 46045 | Oberhausen
Telefon : 0208 20 28 29
Johannes Str 35 | 53225 | Bonn Beuel
Telefon : 0228 4037 7846
Fr. und Sa. 11.00 bis 19.00 Uhr

09 பக்கத் தொடர்ச்சி

## தினமும் அஸ்பிரின்- சர்வரோக நிவாரணியின் மறுபிறப்பு



இவற்றைத் தினமும் உட்கொள்வது அவசியமாகும். தொடர்ந்து உபயோகிப்பவர்கள் இதனைத் திடீரென நிறுத்துவது கூடாது. திடீரென நிறுத்தினால் அது எதிர்விளைவை ஏற்படுத்தி, பக்கவாதம் மாரடைப்பு வருவதற்கான சாத்தியத்தை அதிகரிக்கக் கூடும் என சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வேறு நோய்களுக்காக சத்திரசிகிச்சைக்கு செல்ல வேண்டி நேர்ந்தால் இதனை ஒரு வாரத்திற்கு முன் நிறுத்த வேண்டியிருக்கும். நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனை பெறுங்கள். பாரிய சத்திரசிகிச்சைகளுக்கு மாத்திரமின்றி பல் பிடுங்குவது போன்ற சாதாரண சத்திர சிகிச்சையாக இருந்தாலும் நீங்கள் தினம் அஸ்பிரின் எடுப்பதை மருத்துவரிடம் முற்கூட்டியே சொல்ல மறக்க வேண்டாம்.

பக்கவிளைவுகள் ஏதும் ஏற்படாதா?

தினமும் அஸ்பிரின் சாப்பிடுவதால் பக்கவிளைவுகள் ஏதும் ஏற்படாதா? எல்லோருக்கும் இது உகந்ததா? பெரும்பாலானவர்களுக்கு இதனை உட்கொள்வதில் எத்தகைய பிரச்சனைகளும் ஏற்படாது. ஆயினும் கீழ் கண்டவர்கள் விடயத்தில் அவதானம் தேவை.

அஸ்பிரின் மருந்திற்கு ஒவ்வாமை (Allergy) உள்ளவர்கள் அதனை எடுக்கக் கூடாது. குடற்புண் உள்ளவர்கள் அதிலும் முக்கியமாக அதிலிருந்து இரத்தக் கசிவு ஏற்பட்டவர்கள் எடுக்கக் கூடாது.

பக்க வாதத்தில் இரண்டு வகை உண்டு. முன்னர் கூறியவாறு குருதி உறைதலால் ஏற்படுபவர்களுக்கு இது நல்லது. மாறாக குருதிப் பெருக்கால் பக்கவாதம் ஏற்படுபவர்களுக்கு இது நோயைக் கூட்டக் கூடும். இதனை சி.டி ஸ்கான் போன்ற பரிசோ தனைகளாலேயே கண்டு கொள்ள முடியும்.

அத்துடன் குருதி உறைதல் குறைபாடு நோயுள்ளவர்களும் உபயோகிக்கக் கூடாது. அஸ்பிரின் மாத்திரைகளை உட்கொள்பவர்கள் மதுபானம் அருந்துவதை மிகவும் குறைக்க வேண்டும். ஏனெனில் இரண்டும் சேரும்போது மருந்தின் செயற்பாட்டு வீச்சு அதிகரிப்பதுடன் இரைப்பைக்கும் கூடிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

மாரடைப்பின்போது

ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுவிட்டதற்கான அறிகுறிகள் திடீரென தோன்றினால் ஒரு சாதாரண அஸ்பிரினை உடனடியாக மென்று விழுங்க வேண்டும் என மருத்துவர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். அல்லது மேற் கூறிய குறைந்த வலுவுள்ள அஸ்பிரினில் நான்கு உடனடியாக எடுக்க வேண்டும்.

தினமும் அஸ்பிரின் மாத்திரை எடுப்பவர்களுக்கும் இது பொருந்தும். மென்று விழுங்கும் போது அஸ்பிரின் விரைவில் குடலிலிருந்து உறிஞ்சப்பட்டு உடனடியாகச் செயற்படும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

ஆயினும் பக்கவாதம் ஏற்பட்டால் மாரடைப்பிற்கு எடுப்பதுபோல உடனடியாக அஸ்பிரின் எடுக்கக் கூடாது.

ஏனெனில் எல்லாப் பக்கவாதங்களும் குருதி கட்டிபடுவதால் ஏற்படுவதில்லை. சில சிறுஇரத்தக் குழாய்கள் வெடிப்பதால் ஏற்படுகின்றன. அவ்வாறான வற்றுக்கு அஸ்பிரின் கொடுத்தால் குருதி கசிவது அதிகமாகி நோய் தீவிரமடையும்.



புதிய மருந்து

இப்பொழுது குருதி உறைதலைக் குறைக்கும் அஸ்பிரின் மருந்திற்கு பதிலாக புதிய வகை மருந்தான குளபிடோகிறில் (clopidogrel) பாவனைக்கு வந்துள்ளது. இது சற்று அதிக விலையானது. அஸ்பிரின் மருந்தால் பக்கவிளைவு ஏற்படுபவர்களுக்கு ஏற்றது. அத்துடன் பல தருணங்களில் அஸ்பிரினுடன் சேர்த்தும் மருத்துவர்கள் கொடுக்கிறார்கள்.

மருத்தவ விஞ்ஞானம் அதீத வளர்ச்சி கண்டுள்ள இன்றைய கால கட்டத்திலும் அஸ்பிரினின் உயிர் காக்கும் ஔடதமாகக் கைகொடுப்பதுடன், எளிதாகக் கிடைப்பதும், எல்லோருக்கும் கிட்டக் கூடிய விலை குறைந்த மருந்தாக இருப்பதும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய விடயம் என்பதில் சந்தேகம் இல்லை.












# இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்

யூட் பிரகாஷ் அவுஸ்ராலியா

இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்" மனம் உறுதிமொழி எடுத்துக்கொண்டது. "டேய், இது நூத்தி தொண்ணூத்தி ஒம்பதாவது உறுதிமொழி..பார்க்கலாம் பார்க்கலாம், நீயும் உன்ட உறுதிமொழியும்" மூன்று முடிச்சு ரஜினிகாந்தோடு கதைத்த அதே மனசாட்சி, ரோசா மினிபஸ்ஸின் கண்ணாடியில் என்னைப் பார்த்து கதைத்தது, நக்கலடித்தது.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

அவள் ஒரு கொழும்புக்காரி, அதுவும் மண்டைக்காரி, உயர்தரத்தில் மட்ஸ் படிக்கும் மண்டைக்காரி. கொழும்புக்காரிகளுக்கு கொழுப்பு அதிகம், அதுவும் மண்டைக்காரி வேறு என்பதால் எடுப்பும் கனக்க கூட. கொழும்பு லேடீஸ் கல்லூரியில் படிப்பதால் தடிப்புக்கும் குறைவில்லை. ஆக மொத்தம் அவள் ஒரு எடுப்பும் தடிப்பும் கொழுப்பும் மிகுந்த கொழும்பு மட்ஸ் மண்டைக்காரி.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

நானோ ஒரு யாழ்ப்பாணத்தான், அதுவும் கொமர்ஸ் படிக்கிற மொக்கன். கொழும்பு இந்துவில் அமலன் "பனங்கொட்டை, பனங்கொட்டை" என்று அடிக்கடி கூப்பிட்டு கடுப்பேத்துவான். கொழுப்பு, தடிப்பு எதுவுமே இல்லாத ஒல்லிப்பிச்சான் தேகம், முகத்தின் அரைவாசியை மறைத்து கண்ணாடி. ஆக மொத்தம் நானொரு கொழுப்பு, தடிப்பு எடுப்பு யாதுமற்ற மொக்கு கொமர்ஸ்காரன்.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

"படிக்கிறது ஹின்டு கொலிஜ், பார்க்கிறது லேடீஸ் கொலிஜ்" ரஜினிகாந்த் மனசாட்சி வேற, காலங்காத்தால பொங்கும் பூம்புனல் தீம் மியூசிக் ஒலிக்கிற நேரத்தில் மறக்காமல் ஞாபகப்படுத்தும். "ஆமிட்ட அடிவாங்காமல், இயக்கத்திற்கு பிடிபடாமல், கொம்படி வெளியால ஓடிவந்த நாதாரி உனக்கு காதல் கேட்குதோ" பின்னேரங்களில் மக்கள் குரலில் ஒலிக்கும் கே.எஸ் ராஜாவின் மொடியுலேஷனில் ரஜினிகாந்த் மனசாட்சி வெருட்டும்.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

கொழும்புக்காரியில் இருந்த ஏதோ ஒன்றில் மயங்கிவிட்டேன், இல்லை தொலைந்து விட்டேன், ச்சா ச்சா கிறங்கிவிட்டேன். வட்டமுகத்தில் காந்த விழிகள், விழிகளிற்கு மேல் நெளியும் புருவங்கள். புருவங்களிற்கு மேல் படரும் மேகங்களாய் நெற்றி, நெற்றியில் அந்த குட்டி கறுப்பு பொட்டு. இதயம் படமும் பொட்டு வைத்த வட்ட நிலா பாட்டும் வந்த காலம் அது. பொட்டு வைத்த வட்ட நிலா பாட்டு, இவள் இந்தியா போன போது வைரமுத்துவின் கண்ணில் பட, வைரமுத்து இவளை வைத்து எழுதின பாட்டு என்று கூட நினைத்தேன்.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

கொழும்புக்காரி லேசில் சிரிக்க மாட்டாள், மண்டைக்காரிகள் லேசில் சிரிக்க மாட்டினம். நடந்து போகும் போது அவளின் பின்னால் போனால், அவளின் குறும்பின்னல் தகதிமிதா என்று ஆடும், வாசுகி சண்முகம்பிள்ளையிடம் பரதநாட்டியம் பழகிறளவாம். நீல நிற ஸ்கர்ட் அணிந்து வந்தாளென்றால், இடை தான் கொடியா என்று அன்றிரவு கனவில் கவிதை வரும். அவளின் நடையில் நளினம் இருக்காது, நடனம் பயிலும் கால்களுக்கு நடைப்பயிற்சி தேவையில்லை என்று என்னுடைய இகனொமிக்ஸ் கொப்பியின் கடைசி பக்கத்தில் எழுதிய ஞாபகம்.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

அவளின் நண்பிகளோடு கதைக்கும் போது காத்து பலமாக வீசும், அதாவது இங்கிலீஷில் தான் கதைப்பினம்.
"Today Premnath didn't explain இடைமதிப்பு தேற்றம் ; properly, no"
"Ya ya..hope he will do a better job with மைய எல்லை. Because அது very very கஷ்டமாமடி"

காற்றடித்தால் மரம் ஆடும், ஆனால் சாயாது. சென். ஜோன்ஸ் காற்றுப் பட்டு படித்த இங்கிலீஸ", இவளவயின்ட இங்லீஷ் ஷெல்லடிக்கு பங்கருக்குள் பதுங்கும். நாங்கள், "கரிக் கதை கதைக்காதே ஹரித" என்று கொழும்புத் தமிழும் "மங் ருபியல் தஹயக் துண்ணா, இதுரு சல்லி தென்ட" என்று தத்தி தத்தி சிங்களமும் பழகிக் கொண்டிருந்த காலம் வேற, இதுக்க இங்கிலீஸ் எங்க பழகிறது.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

செவ்வாய்க் கிழமைகளில், பின்னேரம் நாலேகாலுக்கு அவளிற்கு பிரேம்நாத்திடம் புயோர் மட்ஸ்க்ளாஸ், எனக்கு நாலரைக்கு செல்வநாய கத்திடம் புயோர் கொமர்ஸ் க்ளாஸ். அவள் ஏறி இறங்கிற பஸ் ஹோல்டுகள், நேரங்கள், வாற போற ஆக்கள் எல்லாம் ஏழு கிழமைகளாக ரெக்கி பார்த்தாச்சு, பக்காவா ப்ளான் பண்ணியாச்சு.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

செவ்வாய்க்கிழமைகளில் பின்னேர வகுப்புக்கு வரும் போது அவள் தனியத்தான் வருவாள், பாரதிராஜாவின் டான்ஸிங் கேர்ள்ஸ் பிரேம்நாத்திடம் வருவதில்லை. அவள் பஸ் ஏறும் நேரம், பஸ் ஹோல்டில் ஒரேயொரு பிச்சைக்காரன் மட்டும் தான் இருப்பான், அவனும் நித்திரை கொண்டு கொண்டு இருப்பான்.


**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

அவளுடைய வீடு இருக்கும் லேனுக்கால அவள் பச்சைக் கலர் குடை பிடித்து கொண்டு வரும்போது, பக்கத்து வீட்டு அன்டியோடு கதைத்து கொண்டு வருவாள். இருவரும் ஒன்றாக காலி வீதி கடந்து,

தொடர்ச்சி 12ம் பக்கம்...







# உறைபனியில் மீன் பிடித்தல்

கே.எஸ்.சுதாகர்

சமீபத்தில் எனக்கு இந்த உறைபனியில் மீன் பிடிக்கும் சந்தர்ப்பம் கனடாவில் கிடைத்தது. குளிர்ந்த காலங்களில் இங்கேயுள்ள நீர்நிலைகள், குளங்கள் உறைபனியில் மூடிவிடும். இந்த உறைபனியின் தடிப்பம் அல்லது பருமன் அதிகரிக்கும்போது அதன் உறுதியும் அதிகரிக்கும். உறுதி கூடி பனி இறுகிய பின்னர் அதன்மேல் துளையிட்டு தூண்டில் வீசி மீன் பிடிக்கின்றார்கள்.

என்னதான் சொன்னாலும் எனக்கென்னவோ இது ஒரு ஆபத்து நிறைந்த விளையாட்டாகவே தோன்றுகின்றது. விபத்துகள் ஏற்கனவே நடந்தும் இருக்கின்றன.

மார்கழி, தை, மாசி மாதங்கள் கனடாவில் குளிர் காலங்கள். எங்கும் பனித்தூவல்கள் போர்த்தியபடி இருந்தன. நாங்கள் காலை 8 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டோம். 2 மணி நேரப்பயணத்தின் பின்னர் ஒன்ராறியோவின் தென்பகுதியில் அமைந்திருக்கும் சிம்கோ வாவியைச் (Lake Simcoe) சென்றடைந்தோம். அந்த மாநிலத்தின் நான்காவது பெரிய வாவி இதுவாகும்.

வாவி இருந்ததற்கான எந்தவிதமான அடையாளங்களும் அற்று பனிக்கட்டி போர்த்திய நிலம் போல அது காட்சி தந்தது. வாகனத்தை வீதியில் நிறுத்துவதற்கு தோதாக இடம் அமையாததால் வாவியிம் மேல் நிறுத்த முடியுமா என நாங்கள் பதிவு செய்த Dave's Fish huts rentals உரிமையாளரிடம் கேட்டோம். அவர் 'வாகனத்தை நிற்பாட்டுங்கள். ஆனால் திறப்பைத் தந்துவிட்டுப் போங்கள்' என்றார்.

எத்தனையோ தொன் நிறைந்த வாகனத்தை வாவியின் மேல் நிற்பாட்டினோம். எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். அப்படி ஏதாவது நடந்தால் வாகனத்தை பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்காகவே திறப்பைத் தந்துவிட்டுப் போகும்படி கேட்டிருந்தார்கள்.

வாகனம் ஒன்றுடன் இணைக்கப்பட்டிருந்த மரத்தாலான பெட்டி ஒன்றினுள், நாங்கள் கொண்டுவந்த பொருட்களுடன் ஏறினோம். வாவியின் மேலாக அடர்ந்த செறிந்த பனிக்கட்டியின் மேலாக பெட்டியை இழுத்துச் சென்றார் சாரதி. சடசடவென ஓசை எழுப்பியபடி விரைந்தது வாகனம்.

வெளியெ நின்று பார்க்கும்போது ஒன்றிரண்டு குடில்களே (huts) தெரிந்தன. உள்ளே போகப் போக ஒவ்வொன்றாகத் துலங்கி எண்ணுக்கணக்கில்லாத குடில்கள் இருப்பதைக் கண்டோம்.

எங்களுக்குரிய குடிலில் இறக்கிவிட்டார்கள். குடிலிற்குள் சிறையதொரு கனல் அடுப்பு மெதுவாக எரிந்து கொண்டிருந்தது. அதற்கான வாயுச்சிலிண்டர் குடிலிற்கு வெளியே இருந்தது. தூண்டிலில் இரையாக கொழுவுவதற்கான மீன்கள் ஒரு வாளிக்குள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. உள்ளேயிருந்து மீன் பிடிப்பதற்கு ஏதுவாக மரப் பலகைகளிலான இருக்கைகள் அமைந்திருந்தன. உள்ளே செவ்வக விடிவிலான இரண்டு துளைகள் துளையிடப்பட்டிருந்தன. துளையினூடாக பளிங்கு போன்ற நீர் சலனமற்று இருந்தது. தூண்டிலை வீசினோம். மீன்கள் சில வந்து முகர்ந்து பார்த்துவிட்டு விலகிப் போயின. ஒரு சில மீன்கள் தூண்டிலில் சிக்கிக் கொண்டன. அவற்றை எடுக்கும் போது தப்பி ஓடின.

மீன்கள் சுவாசிப்பதற்காக அடிக்கடி துளைக்கு அண்மையில் வந்தபடி இருந்தன. இடையில் ரோன் (drone) ஒன்று பறந்து வந்து எல்லாக் குடில்களையும் படமெடுத்துச் சென்றது. வெளியில் இருக்கும் எல்லாக் குடில்களையும் ஒரே நேரத்தில் பார்வையிட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த ரோனை அவர்கள் பாவிக்கின்றார்கள்.

அதன் சத்தம் கேட்டு எங்கள் குடிலிற்குள் ஒளித்திருந்த எலி ஒன்று ஒரு மூலையில் இருந்து மறு மூலைக்குத் தாவியது. இவ்வளவு நேரமும் எங்களுடன் ஐந்தாவது ஜீவன் ஒன்றும் இருந்திருக்கின்றார் என நாம் திகைத்துவிட்டோம். இருப்பினும், இறுதிவரை அவரால் எங்களுக்கோ, எங்களால் அவருக்கோ எந்தவித இடைஞ்சலும் இருக்கவில்லை. அவர் தன்பாட்டில் ஒரு ஓரத்தில் இருந்து மீன் பிடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மீன்கள் ஒன்றையும்பிடிக்க முடியாமல் இருந்ததால், Dave's Fish huts rentals உரிமையாளருடன் தொடர்பு கொண்டு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று கேட்டோம். சற்று நேரத்தின் பின்னர் இருவர் தூண்டில் சகிதம் வந்தார்கள்.

"இதுவரை எத்தனை மீன்கள் பிடித்தீர்கள்?" என்று கேட்டார். "ஒரு எலி பிடித்தோம்" என்று மூலையில் பதுங்கியிருந்த எலியைக் காட்டினோம்.

வந்தவரில் ஒருவர் எங்களுக்கு மீன் பிடிக்கக் காட்டித் தந்தார். மீன்களைக் கவர்ந்து இழுப்பதற்காக தூண்டிலில் வர்ணஜாலம் காட்டும் மீன்போன்ற ஒன்றைத் தொங்கவிட்டு தண்ணீரினுள் இறக்கினார். அது நீரினுள் சென்றதும், தூண்டிலை என்னிடம் தந்து அதனை மேலும் கீழும் அசைத்துக் கொண்டிருக்கும்படி சொன்னார். வானவில் நிறத்தில் நீரிற்குள் அது அசைந்து மீன்களுக்கு காதல் சமிக்கையிட்டது. சற்று நேரத்தில் ஒரு பெரிய மீன் பிடிபட்டுக் கொண்டது. அதனை வெளியே பிடித்து இழுத்தார். இவ்வளவு நேரத்தின் பின்னர் எங்களுக்கொரு மீன் கிடைத்திருக்கின்றது என நினைப்பதற்கிடையில், பிடித்த மீனைக் கழற்றி சட்டெனத் தண்ணீரில் விட்டார். அது தப்பித்தோம் பிழைத்தோம் எனப் பறந்தோடியது. "இனிப் பிடியுங்கள்" சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

உண்மையில் எங்களுக்கு இந்த மீன் பிடிக்கும் தொழில்நுட்பம் கைவரவில்லை. வீட்டிற்குப் புறப்படும்போது ஒரு மீனையும் நாங்கள்...

11ம் பக்கத் தொடர்ச்சி

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

அன்டி சிட்னியிலிருக்கும் அங்கிளிற்கு கோல் எடுக்க கொமியுனிகேஷனிற்குள் போக, அவள் பஸ் ஹோல்ட் வருவாள் கொமியுனிகேஷனிற்கும் பஸ் ஹோல்டிற்கும் இடையில் இருக்கும் தூரம், எழுபத்தியேழு அடிகள், நடந்து பார்த்து அளந்து கணித்தது.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

அவள் சீஸன் டிக்கெட் வைத்திருக்கிறாள். அடிக்கடி வாற பாணந்துறை மினிபஸ்ஸில் ஏற மாட்டாள், கஞ்ச பிசினாறி. 155 ரத்மலான CTB பஸ் வந்தாலும் ஏறமாட்டாள். அவள் ஏறும் CTB பஸ் இலக்கங்கள்: 100 பாணந்துறை, 101 மொறட்டுவ, 154 கல்கிஸை. இந்த எண் பஸ்களை பிடிக்கவென கொஞ்சம் வெள்ளனவே வந்து நின்று, மினி பஸ்ஸின் கொந்தா "என்ட நங்கி என்ட" என்று கெஞ்சி கூப்பிட்டும் போகாமல், சீஸன் டிக்கட்டை கைக்குள் பொத்தி பிடித்துகொண்டு சராசரியாக ஏழு முதல் பதினொரு நிமிடங்கள் பஸ் ஹோல்டில் நிற்பாள்.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

அந்த ஹோல்டில் நிற்கிற 100, 101, 154 CTB பஸ்களில், சீட் இருக்கிற பஸ்ஸாக பார்த்து ஏறி, யன்னல் பக்கம் இருக்காமல் மற்றப் பக்கம் இருப்பாள். தலை குழம்பிடும் என்று பயமாகவோ முகத்தில் புழுதி படக்கூடாது என்ற தற்காப்பாகவோ இருக்கலாம். கொந்தா வந்து சீஸன் டிக்கெட் கேட்டாலொழிய தானாக போய் சீஸன் டிக்கெட் கொடுப்பதில்லை என்ற வைராக்கியம், தடிப்பு என்றும் சொல்லலாம்.

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்"**

இன்றைக்கு...செவ்வாய்கிழமை பச்சைக் கலர் குடை
நீல நிற ஸ்கேர்ட்
கறுப்புப் பொட்டு
பக்கத்துவீட்டு அன்ரி
கொமியுனிகேஷன்
பிச்சைக்காரன் நித்திரை

**"இன்றைக்கு எப்படியாவது அவள்ட்ட கேட்டிடோணும்**



உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம்.யேர்மன்.பிரஞ்.துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு
வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும்
மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen

# கனேடிய தேசிய கொடி வடிவிலான "பரதமைல்" அமைத்த 1175 தமிழ் மாணவர்கள்!

















கனடா நாட்டின் 150வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கடந்த மாதம் முதலாம் திகதி கனேடிய தேசிய கொடி வடிவிலான "பரதமைல்" நடனத்தை ஸ்ரீமதி நிரோதினி பரராஜசிங்கம் அவர்களின் நெறியாள்கையில் திறந்த வெளியில் அரங்கேற்றினார். இந்நிகழ்வில் 40 க்கும் மேற்பட்ட நடன ஆசிரியர்களின் 1175 மாணவர்கள் பங்கு கொண்ட பரதமைல் நிகழ்வு பார்வையாளர்களை வெகுவாகக்கவர்ந்தது. இந்நிகழ்வின் மூலம் திரட்டப்பட்ட 50 ஆயிரம் டொலர்களை அன்பளிப்பாக கனடிய அரசு வைத்தியசாலைக்கு கொடுத்து தமிழர்களின் மனித நேயத்தைக் காட்டினர். படங்கள் :நன்றி இ.குருவி

## ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி

**28.08.2017**



**அமரர் ராஜேஸ்வரி அம்மா**
**சிதம்பரநாதக்குருக்கள்**

அம்மாவெனும் அருமருந்தே ஈன்றெடுத்து
ஒளிகாட்டிய பெருந்தாயே பெட்டகமே
அருகிருந்தபோது அனுதினமும் காத்திருந்தாய்
அவரவராய் நாம்போனபின்பும்
அகத்திலெமை ஆதரவாய் இருத்திவைத்து
அனுக்கிரகித் தருள் தந்தாய் அம்மா

உங்கள் பிரிவால் துயருறும் பிள்ளைகள்
தகவல்:சிவஸ்ரீ சபாநாதக்குருக்கள்






## கனடா நாட்டின் 150வது சுதந்திர தினத்தை ரியூலிப் பூக்களும் கொண்டாடின

கனடா நாட்டின் 150வது சுதந்திர தினத்தை முன்னிட்டு ரியூலிப்பூக்கள் வெள்ளை நிறத்தில் சிவப்புச் சுடர்போன்ற அமைப்பு வரும்படி விதைகள் மரபுமாற்றம் செய்ப்பட்டு விற்பனைக்கு வந்தது. பூத்தது.

2 இலட்சத்திற்கு மேற்பட்ட பூக்கள் பூத்து அணிவகுத்து கனடா நாட்டின் 150 சுதந்திர தினத்தை கொண்டாடியுள்ளன. இதற்கான விதைகள் கடந்த ஆண்டு புரட்டாதி மாத்திலேயே சந்தைக்கும் வந்துவிட்டன. விஞ்ஞான வளர்ச்சியில் நாளை பூமழையும் பொழியலாம்.




Essen மாநகரில் மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்
APIRAAMI ENTERPRISE
இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும்
கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும்


Pferdemarkt 9 45127 ESSEN Tel.: 0201/236925



சிவகாமி மணவறைச் சோடினை
யோகன், யோகி:
02823/6838
Mobil:
152 138 22 350
Yogan Deko


விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# குழந்தைகளின் அறிவுத்திறன் அதிகரிப்பில் அப்பாவின் பங்கு முதலிடமாகிறது

## ஒக்ஸ்போட் பல்கலைக்கழக ஆய்வு

நகுலா சிவநாதன்





குழந்தைகளின் அறிவுத்திறன் அதிகரிப்பில் அப்பாவின் பங்கு முதலிடமாகிறது.

அப்பாவின் வளர்ப்பு முறையில் உருவாகும் குழந்தைகளின் அறிவுத்திறன் அதிகரிப்பதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

அண்மையில் ஒக்போட் பல்கலைக்கழகம் நடாத்திய ஆய்வில் அப்பாக்கள் இணைந்து வளர்க்கும் குழந்தைகள் அறிவில் கூடிய மீத்திறன் எடுப்பதாக அறியத்தரப்படுகிறது.

அப்பாக்களை தனிய ஒரு அறையில் விட்டு குழந்தைகளையும் சேர்ந்து விளையாட விட்டார்களாம். இதில் விளையாட்டுப்பொருட்களை பயன் படுத்தாமல் முற்றுமுழுதாக அப்பாவுடன் விளையாட குழந்தைகளை அனுமதிக்கப்பட்டது.பின்னர் ஆய்வு செய்கையில் அறிவில் கூடிய குழந்தைகளின் உருவாக்கத்தை உணர இதன் மூலம் உணரமுடிந்ததாம்.

பின்னர் பிள்ளைகலை பரிசோதிக்கையில் கேட்கப்படும் வினாக்களுக்கு விரைவாக பதில் வழங்கியமையும் காண முடிந்தது. அப்பா பிள்ளைகளுடன் சேர்ந்து பழகுவதும் கற்பதும் நுட்பத்திறன்களையும் கணித நுணுக் கங்களையும் அடிப்படை அறிவுகளையும் அறிய முடிந்தது அவர்கள் கற்பதற்று சுதந்திர சூழலும் இல்குவாகவும் இருந்ததாம்.





பொறுமையாக பிள்ளைகளுடன் விளையாடியமையும் அறிய முடிந்தது. அம்மாவின் வளர்ப்பில் பழக்க வழக்கங்களை கற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால் பயத்தை அம்மாக்கள் காட்டி செயற்படுத்தியமையும் அறிய முடிகிறது.

அம்மாவின் வளர்ப்பில் பாதுகாப்பு அதிகரித்து இருந்தமையும் காண முடிந்தது.

அப்பாவின் வளர்ப்பீல் சுதந்திரம் அதிகமானதும். பிள்ளைகள் மகிழ்வோடு விளையாடியமையும் கண்டு அறியப்பட்டது. எனவே அறிவில் கூடிய பிள்ளைகளை உருவாக்க அப்பாவின் இணைவும் எப்போதும் தேவையாகவே உள்ளது.

# தமிழாய் வாழ்ந்த மணிமொழியனார்




சேவியர்

உலகத் திருமறையாம் திருக்குறள் உல கெங்கும் மக்களுக்கு வாழ்வியலைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. சிலருக்கு திருக்குறள் என்பது இலக்கிய நூல். சிலருக்கு வாழ்வியல் நூல். சிலருக்கு வாழ்க்கையே அந்த நூல் தான் ! அப்படி வாழ்வின் அத்தனை மூலை முடுக்குகளையும் திருக்குறளின் சிந்தனைகளினால் அலங்கரித்து வாழ்ந்தவர் தான் மணிமொழியனார். அவரைப் போல திருக்குறளை

நேசித்தவர்கள் இருக்க முடியுமா என்பது மிகப்பெரிய கேள்விக்குறியே !

கடந்த ஆண்டு அவர் இந்த உலகை விட்டுப் பிரியும் வரை அவர் குறளையே குரலாய்க் கொண்டிருந்தார் ! குறளையே விரலாய்ப் பற்றியிருந்தார்.

அவரது வாழ்க்கையில் அவர் கொண்டிருந்த இலட்சியங்கள் இரண்டு. ஒன்று திருக்குறள் காட்டும் நெறியில் வாழ்வது. தனது வாழ்க்கையின் ஒவ்வொரு செயலையும் அதன் அடிப்படையிலேயே அமைத்துக் கொண்டார். தனது குடும்பத்திலுள்ளவர்களுக்கும் திருக்குறளின் அழகையும், எழிலையும் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருப்பார்.

இன்னொன்று, திருக்குறள் காட்டும் நெறியை உலகெங்கும் பரப்புவது. அதற்காக உலகின் பல்வேறு பாகங்களிலும் பயணித்து திருக்குறளைக் குறித்து உரைகள் ஆற்றினார். இப்படி தனது இலட்சியங்கள்

இரண்டையும் மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டியவர் மணிமொழியனார்.

குறிப்பாக மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரின் வாழ்க்கையில் திருக்குறள் நுழைய வேண்டும் எனும் ஆர்வம் கொண்டிருந்தார். அப்படி நுழைந்தால் அவர்களுடைய வாழ்க்கை அறம் சார்ந்த நெறியில்

செழுமையாய் வளரும் என்பதை அவர் உளமார நம்பினார். அதற்காக பல்வேறு போட்டிகள், கலந்துரையாடல்கள், திருக்குறள் கருத்தரங்கங்கள் போன்றவற்றை நடத்தி வந்தார்.

அப்துல் கலாம் அவர்கள் திருக்குறளைப் பேசாமல் எந்த உரையையும் முடிப்பதில்லை. மணிமொழியனாரோ, பேசுவது முழுவதும் திருக்குறளாகவே இருக்கும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் கையால் திருக்குறள் செம்மல் விருது பெற்ற அவர், திருக்குறள் மாமணி, குறள் வேள், வள்ளுவத் தென்றல், திருக்குறள் பீடம் போன்ற அனைத்து திருக்குறள் சார்ந்த விருதுகளையும் பெற்றிருக்கிறார் என்பது அவரது திருக்குறள் பணியை விளக்குகிறது. அவருடைய தமிழ்ப் பணிகளுக்காக, கடந்த ஏப்ரல் மாதம் தமிழக அரசு தமிழ்ச்செம்மல் விருது வழங்கி கௌரவித்தது. அவருடைய மகள் டாக்டர் அனு அதைப் பெற்றுக் கொண்டார். இவரது படைப்புகளின் முழு நூல், "மணிமொழியம்" எனும் பெயரில் சமீபத்தில் வெளியானது. அவரது முந்தைய நூல்களான இலக்கியம் பேசி மகிழவோ, குறள் நிலா முற்றம் போன்றவையும் இந்த முழு தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. திருக்குறளை நேசிப்பவர்களும், மணிமொழியன் அவர்களை நேசிப்பவர்களும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய நூல் இது !

ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் - ஹம்

அடியவர் குறைதீர்க்கும் வெங்கடேஸ்வரப் பெருமானை வணங்கி உங்கள் குறைதீருங்கள்

புரட்டாதிச் சனிக்கிழமை மிக மிக விஷேசமானதாகும்.

அதிலும் வெங்கடேஸ்வரப்பெருமாளுக்கு ஏற்றதினம் சனிக்கிழமை விரதம் இருந்து மாவிளக்கு ஏற்றிப்பூஜை செய்வர். ஆதாரம்- இந்து சமயப்பண்டிகைகள் வழிபாட்டுமுறைகள் .பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவிலும் வண்ணை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவிலும் தனித்துவம் பெற்ற புரட்டாதிச்சனி அனுஷ்டிக்கும் தலங்களாக விளங்குகின்றன. ஆதாரவெளியீடு- சனிஸ்வர வழிபாடு .புரட்டாசி மாதம் புருஷோத்தமனுக்கு உகந்த புண்ணிய மாதம். அதற்கு மேலும் பல சிறப்புகளும் உண்டு. யேர்மன் நாட்டில் உள்ள ஒரே ஒரு ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயம் (Hamm மாநகரில்) எள்ளண்ணை எரித்து வழிபாடு செய்ய மிக அற்புதமான தலமாக விளங்குகின்றது.



ஆலய தரிசன நேரம்:
காலை 9.00 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை 17.00 முதல் 20.00 வரை
பூஜை நேரம்: தினமும்:
காலை 10.00 மணி மாலை 18.00 மணி

Tel:02381 42 66 420
+49(09176 80 56 96 09

Sri Venkateswara perumal Temple.e.V
Nassauerstraße 20
59065 Hamm-Mitte/Germany





# பெண்களின் ராசியும் அவர்களின் காதல் உணர்வும்!





ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு உணர்ச்சிகள் இருப்பது போல, ஒவ்வொரு ராசி கொண்டுள்ள பெண்ணுக்கும் காதலில் ஒவ்வொரு ஆசை, தான் விரும்பும், தான் காதலிக்க போகும் நபரிடம் இந்த குணாதிசயங்கள், பண்புகள் எல்லாம் இருக்க வேண்டும் என எண்ணுவார்களாம். அப்படி ஒரு ஆணை பார்த்துவிட்டால் அவர்களுடன் காதலில் விழ, நீந்த, பறக்க இவர்கள் அஞ்சுவதே கிடையாது. ஒருவேளை நீங்கள் காதலிக்கும் பெண் அல்லது காதலித்து கொண்டிருக்கும் பெண் எந்த ராசியாக இருந்தால், அவர் உங்களிடம் என்ன அதிகம் எதிர்பார்ப்பார் என நீங்கள் அறிந்துக் கொள்ள வேண்டுமா?

### மேஷம்!

ஒரு சிறந்த நண்பராக, நம்பிக்கை வைக்கக் கூடிய ஒரு சிறந்த காதலராக இருத்தல் வேண்டும். இது தான் மேஷ ராசி பெண்களின் ஆசை. தானாக அவர் மீது மிகுதியான காதலில் விழ வேண்டும் என்பது அவரது ஆசை. முடிவிலி பயணமாக தங்கள் உறவு இருக்க வேண்டும் என அவர்கள் ஆசைப்படுவார்கள். சில சமயங்களில் மேஷ ராசி பெண்கள் குழந்தைத் தனமாக நடந்துக் கொள்வார்கள். ஆனால், அவர்கள் செய்வது எல்லாமே தங்கள் துணை மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே!

### ரிஷபம்!

எல்லாரையும் போல, சினிமாவில் காண்பிப்பது போல, சமூக ஊடகங்களில் பகிரப்படும் அந்த காதல் மிதிக்கும் பதிவுகள் போல உங்களால் காதலிக்க முடியுமா? அல்லது உங்கள் காதலி ரிஷப ராசி என்றால்.. நீங்கள் இப்படி தான் இருந்தாக வேண்டும். அவர்கள் விருப்பம் இது தான். தங்கள் உறவை பற்றி இந்த உலகம் அறிய வேண்டும் என்பதே ரிஷப ராசி பெண்களும் பேரார்வம் மற்றும் ஆசை.

### மிதுனம்!

மிதுனம்! இயல்பாகவே பேரார்வம் கொண்டிருப்பார்கள் மிதன ராசி பெண்கள். நிலையற்று, சாத்தியமற்று சில தருணங்களில் காணப்படும் மிதுன ராசி பெண்கள் சில சமயங்களில் காதல் அலுத்துப்போய்விட்டால், உறவில் இருந்து வெளிவரவும் தயங்க மாட்டார்கள். தனது முழு ஈர்ப்பையும் பெற்ற ஒருவரை தான் இவர்கள் விரும்புவார்கள். எனவே, மிதுன ராசி பெண்கள் மீது காதல் வயப்படுவது என்பது, முழு மனதால் இணைந்தால் மட்டுமே அது சாத்தியம்.

### கடகம்!

கடகம்! கடக ராசி பெண்கள் தங்கள் துணையிடம் எதிர்பார்க்கும் ஒரே பண்பு, நம்பிக்கை! அதே போல அவர் எல்லா இரகசியங்களும் உங்களிடம் கூறுவார் என எதிர்பார்க்க வேண்டாம். ஏனெனில் சில சமயங்களில் மனம் திறந்து பேச அவர்கள் தயக்கம் காட்டுவர். அந்த தயக்கத்தை உடைக்க நீங்கள் அவரது முழு காதலையும் பெற வேண்டும்.

### சிம்மம்!

சிம்மம்! நம்பிக்கையும், நேர்மையும் தான் சிம்ம ராசி பெண்கள் எதிர்ப்பார்க்கும் பண்புகள். இந்த இரண்டு பண்புகள் உங்களிடம் இருந்தால் மட்டுமே போதும், சிம்ம ராசி பெண்கள் உங்களை காதலிக்க துவங்கிவிடுவார்கள். உறவில் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதே அவர்களது எதிர்பார்ப்பு. அதே போல அர்ப்பணிப்புடன் உறவில் இருக்க வேண்டும். அவரது நம்பிக்கையை சம்பாதிக்க வேண்டும். சிம்ம ராசி பெண்கள் தங்கள் காதல் துணை தான் உலகம் என எண்ணி வாழ்பவர்கள்.

### கன்னி!

கன்னி! நூற்றுக்கு நூறு சரியாக இருக்கும் ஆண்மகனைத்தான் தங்கள் துணையாக தேடுவர் கன்னி ராசி பெண்கள். தங்களுக்கு சவால்விடும் வகையிலான நபர்களை தான் அதிகம் விரும்புவார்கள். அவர்களை காட்டிலும் நீங்கள் அதிகமாக நல்லவராக இருக்க வேண்டும், குறைந்தபட்சம் அவரளவுக்காவது. அதே போல தனது கனவுகள் மற்றும் வெற்றிக்கு பக்கபலமாக, உறுதுணையாக இருக்க வேண்டும் என எண்ணுவர்.

### துலாம்!

துலாம்! வியப்பூட்ட வேண்டும், பார்த்தவுடன் பற்றிக் கொள்ளும் ஈர்ப்பு இருக்க வேண்டும் என்பதே துலா ராசி பெண்களுடன் விருப்பம் மற்றும் ஆசை. இவர்களை சுற்றி என்றுமே பெரிய ஆசைகள் இருக்கும். ரோஜாக்கள், உல்லாச லைட் டின்னர் என ஒரு அழகான காதல் வாழ்க்கை வாழ விரும்புவர். அதே போல, துலா இராசி பெண்களிடம் காதலை வெளிப்படுத்த தயக்கம் கொள்ள வேண்டாம்.

### விருச்சிகம்!

விருச்சிகம்! அவர்களது ஆசைகள் மற்றும் வாழ்வில் நீங்கள் வேறு யாரையும் பொருத்திப்பார்க்க முடியாத ஒரு நபராக இருக்க வேண்டும் என விரும்புவர். இணைதல் மற்றும் கூடலில் மிகவும் ஆர்வமாக இருப்பார்கள். அதே சமயத்தில் தங்கள் துணை தன் மீது மட்டுமே அனைத்து அன்பையும் காட்ட வேண்டும் என்ற ஆசை இருக்கும். தன்னை காட்டிலும் அதிக நேரம் வேறு யாருடனும் செலவிட கூடாது என எண்ணுவர்.

### தனுசு!

தனுசு! சுதந்திரமாக இருக்க வேண்டும். உறவு என்பது அவர்களது பாதையில், பயணத்தில் ஒரு தடையாக இருக்க கூடாது என தனுசு ராசி பெண்கள் விரும்புவார்கள். தன்னை போலவே இருக்கும் நபரை தான் தேடுவர். கேலியும், துணிகரமான வாழ்க்கை வாழ வேண்டும் என்றால் இவர்களுடன் காதல் பயணத்தை துவக்கலாம்.

### மகரம்!

மகரம்! மகர ராசி பெண்கள் தங்கள் வாழ்க்கையை மிகவும் தீவிரமாக காணும் பண்பு உடையவர்கள். எந்த வேலையாக இருந்தாலும் அதில் முழு ஈடுபாடு, முழு ஆர்வம் காட்டுவார்கள். நேர்மையும் காதலும் அதிகம் வாழ்க்கையில் பெற விரும்புவார்கள். குறுகிய கால உறவிற்கு இவரிடம் நேரம் இருக்காது. நிலைத்து இருக்க வேண்டும்.

### கும்பம்!

கும்பம்! புத்திசாலி, கிரியேட்டிவாக இருக்கும் இவர்கள் அதிக சுதந்திரத்தை எதிர்பார்ப்பார்கள். தங்கள் திறமையை பாராட்டாத நபர்களை இவர்கள் விரும்ப மாட்டார்கள். நீங்களும் கிரியேட்டிவ் நபராக இருந்தால் இவருடன் காதல் பயணம் இனிதாக இருக்கும்.

### மீனம்!

மீனம்! காதலை அதிகம் காதலிக்கும் பெண்கள் மீன ராசி பெண்கள். தன்னை ஊக்குவிக்கும், நேர்மறை எண்ணங்களை தன்னுள் விதைக்கும் நபரை தான் இவர்கள் விரும்புவார்கள். அதே போல கடினமான சூழல்களில் சிறந்த உறுதுணையாக நிற்பார்கள். மிக உணர்ச்சிவசப்படும் நபர்கள்.


RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG

Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002

Sinnadurai Kiritharan | Tel. 05723-914519 | www.rklimmo.de | info@rklimmo.de



Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்: 100% Free service

Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service

Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service

Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்

Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்

Full Service / முழுமையான சேவை

நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!

Sinnadurai Kiritharan
Tel:05723 914519

புதிய
வாடிக்கையாளர்களுக்கு
100,00€ இருந்து 500,00€
வரை
பெறுமதியான LIDL
அல்லது TANK Gutschein

01.04.2017 முதல்

31-12-2017 வரை



Tel: 05723- 914519 Mobil 0172-5214530 www.rklimmo.de

EU-VAT / Umsatzsteuer ID-Nr DE 186406298 -- Berufserlaubnis erteilt am 08.01.2002 Registrierungsnummer D-W-133-ADSJ-30

# வெற்றிக்கும், தோல்விக்கும் இடையே ..



சேவியர்

வெற்றி தோல்வி பற்றி சிந்தித்தாலே சட்டென நினைவுக்கு வரும் தாமஸ் ஆல்வா எடிசனின் கதை ! ஆயிரக்கணக்கான முறை தோல்வியைத் தழுவிய அவர் கடைசியில் வெற்றிகரமாய் மின்விளக்கைக் கண்டுபிடித்தார். "இத்தனை முறை தோற்றுவிட்டீர்களே" என அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் "நான் தோற்றேன் என்று யார் சொன்னது ? எவையெல்லாம் தவறான வழிகள் என்பதைக் கண்டுபிடித்தேன்" என்றார்.

வெற்றி என்பதும், தோல்வி என்பதும் நமது மனதைப் பொறுத்தது. நமது மதிப்பீடுகளைப் பொறுத்தது. நமது வாழ்க்கையில் நாம் எதை முதன்மைப்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தது !

வாழ்க்கையை ஒரு பயணம் என எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விஷயம் நமக்கு இலக்காக இருக்கிறது. ஒவ்வொரு விஷயம் நமக்கு வெற்றியாய் இருக்கிறது. சிறுவயதில் சைக்கிள் ஓட்டுவது வெற்றி என மார்தட்டுவோம். இருபது வயதில் சைக்கிள் ஓட்டுகிறேன் என பீத்திக்கொள்ள முடியாது !
தேர்வில் மதிப்பெண், ஒரு வேலை, திருமணம், குழந்தை வளர்ப்பு, கலைகள் என எல்லாவற்றிலும் நாம் ஒரு விஷயத்தை வெற்றி என கோடு போட்டு வைத்திருக்கிறோம். கோட்டுக்கு இந்தப் பக்கம் வந்தால் வெற்றி, கோட்டுக்கு அந்தப் பக்கம் போனால் தோல்வி என்பதே பெரும்பாலும் நம்முடைய முடிவு.

பெரும்பாலான வேளைகளில் நமது வெற்றியை நிர்ணயிப்பது கூட நாமல்ல. அடுத்தவருடைய தோல்வி தான் ! இன்னொருவரை விட நாம் ஒரு படி மேலே இருப்பதாகக் காட்டி கொள்வது, அல்லது அடுத்தவரை இழுத்து ஒரு படி கீழே தள்ளுவது வெற்றி என கருதிக் கொள்வதுண்டு !

உண்மையில், வெற்றி என்பதும் தோல்வி என்பதும் மாயையே !

வெற்றி என்பதும், தோல்வி என்பதும் வாழ்வின் நிகழ்வுகளுக்கு நாமாகவே இட்டுக் கொண்ட நாமங்கள். மதிப்பெண் பட்டியலில் இந்த இடத்தில் இருந்தால் அது வெற்றி ! பொருளாதாரத்தில் இந்த நிலையில் இருந்தால் அது வெற்றி ! அலுவலகத்தில் இந்த நிலையில் எனில் அது வெற்றி ! கலைகளில் இந்த இருக்கையில் அமர்ந்தால் அது வெற்றி என்றெல்லாம் நாமே மைல்கற்களை போட்டு விடுகிறோம். நமது பயணம் அந்த மைல் கற்களின் வழியாய் போகவில்லையேல் அதைத் தோல்வி என முடிவு செய்து விடுகிறோம்.
வெற்றி என்பது இறைவன் தந்த ஒரு நாளை எப்படி நல்ல முறையில் நாம் செலவிட்டோம் என்பதில் இருக்கிறது. அதே நாளை பிறருக்கு பயனற்ற வகையில் செலவிடும் போது அது தோல்வியாய் மாறிவிடுகிறது !




இப்படிப்பட்ட நாட்களின் கூட்டுத்தொகை நமது வாழ்க்கையின் வெற்றி தோல்வியை பறைசாற்றுகிறது.

ஒரு இடத்தை அடைவதே வெற்றி என முடிவு செய்து விட்டால், அந்தப் பயணத்தின் இடையில் நடக்கின்ற சுவாரஸ்யங்களை மொத்தமாய் இழந்து விடுவோம். மலையின் உச்சியில் ஒரு வீடு இருக்கிறது என வைத்துக் கொள்ளுங்கள். அந்த உச்சியை அடைவது தான் உங்கள் இலட்சியம் என வைத்துக் கொள்ளுங்கள். அதை இரண்டு விதமாக அணுகலாம்.
ஒன்று, போகும் வழியில் மலையை ரசித்து, மலையின் தலையில் தலையாட்டும் இலைகளை ரசித்து, கானகத்தின் காற்றோடு கதை பேசிச் சிரிக்கும் பெயர் தெரியா மலர்களை ரசித்து, கிளைகளில் தாவும் பறவையின் இறகுகளின் மென்மையை ரசித்து, சரசரக்கும் சருகுகளின் இசையை ரசித்து பயணிக்கலாம்.
அல்லது, வீட்டின் கூரையில் மட்டுமே பார்வையை பதித்து, அர்ஜுனர் வில் போல, கல் முள் எல்லாம் தாண்டி வீட்டை அடையலாம். போகும் வழியில் இருக்கின்ற அத்தனை சுவாரஸ்யங்களையும் நிராகரித்து விடலாம்.
இதில் முதலாவது மனிதன் அந்த வீட்டை அடையாவிட்டாலும் மனதுக்குள் குதூகலமாய் இருப்பான். அவனது பயணம் வெற்றி என அவனுக்குத் தோன்றும். இரண்டாவது மனிதனோ வீட்டை அடைந்தாலும் அது அவனுக்கு விருப்பமானதாய் இல்லை என விரைவிலேயே உணரத் துவங்குவான்.



வெற்றி வண்ணத்துப் பூச்சியைப் பிடிப்பதிலல்ல ! அதை ரசிப்பதில் !
"இலட்சியத்தை நோக்கி ஓடுங்கள். தோல்வியடைந்தால் துவளாதீர்கள். நீடிய பொறுமையுடனும், விடா முயற்சியுடனும் ஓடினால் வெற்றி நிச்சயம்" என்றெல்லாம் மூச்சு முட்ட பேசும் தன்னம்பிக்கை உரைகள் நமக்குத் தேவையற்றவை ! அவை பழைய சித்தாந்தத்தின் பிள்ளைகள்.

ஒரு இலக்கை அடைவதல்ல வெற்றி !
இலக்கு எது என அறிவதில் !!

தொடர்ச்சி 17 ம் பக்கம்






16 ம் பக்க தொடர்ச்சி.... வெற்றிக்கும், தோல்விக்கும் இடையே ..



மரணப் படுக்கையில் மூச்சை இழுத்து இழுத்து விடும் ஒருவரிடம் கேட்டுப் பாருங்கள். சிக்கலில்லாமல் மூச்சு விடுவதே வாழ்க்கையின் வெற்றி என்பார் !
டயாலிஸிஸ் படுக்கையில், தினமும் அளந்து வைத்த அரை டம்பர் தண்ணீரில் மட்டுமே நாக்கை நனைத்து வாழும் ஒருவரிடம் கேளுங்கள், நிறைய தண்ணீர் குடிப்பதே வாழ்க்கையின் வெற்றி என்பார்.
சாலை கடக்க ஆளை எதிர்பார்த்து கலங்கி நிற்கும் பார்வையிழந்தவர் சொல்வார், உலகைக் காண முடிந்தால் அதுவே மிகப்பெரிய வெற்றி !
மௌனத்தின் தாழ்வாரங்களில் உழலும் பேச்சிழந்தவருக்கோ, ஒரு வார்த்தை பேசுவதே வாழ்க்கையின் ஆகப்பெரிய வெற்றியாய் இருக்கும் !
சற்றே சிந்தித்துப் பார்ப்போம் !

### எது வெற்றி ?

மாருதி வைத்திருப்பவர் மெர்சிடிஸ்க்கு மாறுவதா ? கூரை வீடு வைத்திருப்பவர் மாளிகை வீட்டுக்கு இடம் பெயர்வதா ? இல்லை ! வெற்றி என்பது நாம் பயணிப்பதில் இல்லை, நமக்குள் பயணிப்பதில் இருக்கிறது !

நமது பால்யகால நினைவுகளை கொஞ்சம் அசைபோட்டுப் பார்ப்போம் ! எது நமக்கு வெற்றியாய் தெரிந்தது ? எது நமக்கு மகிழ்ச்சியாய் இருந்தது ?

**தந்தையின் கரம் பிடித்து வரப்புகளில் நடந்த நாட்கள், கணினியில் விரல் அடித்து கடந்த நாட்களை விட உன்னதமானவை இல்லையா ?**
**அன்னையின் கரம் தொட்டு அமுதுண்ட நாட்கள், ஐந்து நட்சத்திர ஹோட்டல் உணவுகளை விட உன்னதமானவை இல்லையா ?**
**சண்டையிட்டும், அழுதும் திரிந்த சகோதர நாட்கள் அலுவலக கெட்டுகதர்களை விட மகத்துவமானவை இல்லையா ?**

எனில் வெற்றி என்பது உயர்தலில் அல்ல, உணர்தலில் !

உறவுகளின் பாசக் கூட்டில் நாட்களை இனிதே கழிக்க முடிந்தால் அது வெற்றி ! மண் வந்த கடவுளான பெற்றோரைப் பாதுகாக்க பாசம் துடித்தால் அது வெற்றி ! தோழர்களின் தேவையில் கேட்காமலேயே கால்கள் ஓடினால் அது வெற்றி ! மனித நேயத்தின் குரல் கண நேரமும் உயிர்ப்புடன் துடித்தால் அது வெற்றி ! எனில், வெற்றி என்பது சேர்ப்பதில் அல்ல, செலவழித்தலில் !

**பாசத்தின் கரம் பிடித்து மகனுக்காகவும், மகளுக்காகவும் உழைக்கும் தந்தை, மனதில் இம்மியளவும் சோர்வு கொள்வதில்லை. பிள்ளைகளின் நலனே அவரது வெற்றி ! நேசத்தில் தினம் நனைந்து அத்தனை வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்யும் அன்னை எரிச்சல் கொள்வதில்லை. பிள்ளைகளின் பசியாற்றுதலே அன்னையின் வெற்றி !**




எனில் வெற்றி என்பது அடைதலில் அல்ல, உடைதலில்.
கடைகளிலும், இணையத்திலும் வெற்றிகளுக்கான விதிமுறைகள் ஆயிரக்கணக்கில் உண்டு. தோல்வியிலிருந்து எப்படி வெற்றியை பற்றிக் கொள்ளலாம் என போதிக்கும் நூற்கள் பல்லாயிரக்கணக்கில் உண்டு. அவையெல்லாம் பொருளாதாரத்தின் பல் பிடித்து உங்களை சிம்மாசனம் ஏற்றத் துடிப்பவை !
அவற்றை ஒதுக்குங்கள் ! வெற்றி என்பது இருக்கைகளில் இல்லை இதயத்தில் இருக்கிறது. வெற்றி என்றால் என்ன என்பதை மறு பரிசீலனை செய்வோம். வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதிலும், நமது வாழ்க்கையை பிறருக்கு பயனுள்ள வகையில் அமைத்துக் கொள்வதிலும் தான் வெற்றி இருக்கிறது !




கோபத்தை துரத்தி விட்டு அன்பை அணிந்து கொள்ளும் வாழ்வில் வெற்றி இருக்கிறது. சலனத்தை விலக்கி விட்டு உறவுகளை இறுகப் பிடிப்பதில் வெற்றி இருக்கிறது. இறுக்கத்தை உடைத்து விட்டு மன்னிப்பை பகிர்வதில் வெற்றி இருக்கிறது !
உலகம் தருகின்ற அட்டவணைக்குள் அடைபடுவதல்ல வாழ்க்கை ! இறைவன் கொடுத்த சிறகைக் கொண்டு வானம் அடைவதே வாழ்க்கை !
இக்கணம் நமதே !
இவ் எண்ணமே வெற்றி !!






# புங்குடுதீவு வல்லன் திருப்பெருந்துறை, உறை நாகதம்பிரான்








புங்குடுதீவு கிழக்கு 8ம் வட்டாரம் வல்லன் திருப்பெருந்துறை உறை நாகதம்பிரான் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்ச குண்ட பக்ஷமகாயாக மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா கடந்த 06.04.2017 தொடங்கி 10.04.2017 வரை சிறப்பாக நடைபெற்று முடிந்தது என்ற செய்தியைப் புலம்பெயர் நாடுகளில் வாழும் புங்குடுதீவு வாழ் பொதுமக்களுக்கும் சைவப் பெருமக்களுக்கும் அறியத்தருவதில் மட்டில்லா மகிழ்வு கொள்கிறோம்.

06.04.2017 முதல் நாள் நிகழ்வாக கணபதி வழிபாடு, கணபதி கோமம், புண்ணியயாகம், திரவியசுத்தி, திரவியயாகம், கிராமசாந்தி இடம்பெற்றன. இரண்டாம்நாள் நிகழ்வுகளாக புண்ணியயாகம், கணேசவழிபாடு, சூர்யாக்கினி சங்கீரணம், கெங்காபூசை, மூர்த்திகள்வாசம் போன்றவையும் மூன்றாம்நாள் புண்ணியாகம், இரட்சாபந்தனம், கணபதிதாளம், பிரசன்னபூசை, திருமுறை பாராயணம் என்பன இடம்பெற்றன. நான்காம்நாள் விக்னகர் வழிபாடு, புண்ணியயாகம், பூசைகள், திருமுறைஓதல், எண்ணெய்க்காப்புச் சாத்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. ஐந்தாம்நாள் நிகழ்வாக கணபதிபூசை, புண்ணியாகம், யாகபூசை, நாதாஞ்சலி, கீதாஞ்சலி, மும்மூர்த்திகளுக்கு மகாகும்பாபிசேகம் எனவும் தொடர்ந்து ஆசியுரைகள் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

இந்த ஆலயத்தின் புனர்நிர்மாணப் பணிகளாக வசந்த மண்டபம், மணிக்கோபுரம் போன்ற கட்டியவேலைகள் திருப்பணிகள் பூர்த்தியடையாத காரணத்தால் அடியார்களின் பேருதவியால் அடுத்தசொற்பகால எல்லைக்குள் இப்பணிகள் திறம்பட ஈடேறும். இத்திருப்பணிக்கு நிதி உதவி வழங்கிவரும் புலம்பெயர் நாடுகளில் வாழும் உறவுகள் அனைவருக்கும் இறைவன் திருவருள் கிடைக்க வேண்டுகிறோம்.



# யேர்மனியில் அன்னை மேரிக்கு மணி மகுடம்

**சேவியர்.**

அன்னை மரியாள் என்றதும் மனக் கண்ணில் என்ன விரிகிறது ? ஒரு மென்மையான கருணை வடியும் முகம். குழந்தை இயேசுவை தாங்கியிருக்கும் ஒரு தாய்மையின் வடிவம். அல்லது துயரத்தின் விழிகளோடு, இயேசுவின் வலிகளையும், மரணத்தையும் காணும் உருவம். இப்படித் தான் உலகின் பெரும்பாலான ஓவியங்களும், சிற்பங்களும் அன்னை மரியாவை காட்சிப்படுத்துகின்றன.

உலகெங்கும் குறைந்தபட்சம் 37 மில்லியன் கிறிஸ்தவ ஆலயங்கள் இருக்கின்றன. இவற்றில் கத்தோலிக்க தேவாலயங்கள் அனைத்திலும் தவறாமல் பார்க்க முடிகின்ற ஒரு சிற்பம் அன்னை மரியாளின் சிற்பம். அதே நேரத்தில், கத்தோலிக்கம் சாராத எந்த ஒரு ஆலயத்திலும் நீங்கள் அன்னை மரியாளின் சிலையைப் பார்க்க முடியாது.
'ஒரு மனிதனின் உடலிலுள்ள உறுப்புகளெல்லாம் நாவாக மாறினாலும் மரியன்னையை அவருடைய தகைமைக்கு ஏற்றவாறு புகழ முடியாது' என்கிறார் புனித அகுஸ்தீனார். 'அருள் நிறைந்த மரியே வாழ்க' என்று கபிரியேல் தூதர் மரியாளை வாழ்த்துகிறார், தூதர்கள் தாமாக எதையும் செய்வதில்லை. அவர்கள் கடவுளின் கட்டளைப்படியே இயங்குகிறார்கள். எனவே இந்த வாழ்த்தும் கடவுளிடமிருந்தே வந்திருக்கிறது. எனவே அன்னை மரியாள் வாழ்த்துதலுக்கு உரியவரே.

'தூய ஆவி நிரம்பியவராய் பெண்களுக்குள் நீர் ஆசீர்வதிக்கப் பட்டவர். என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார் ?' என்று எலிசபெத் மரியாவை வாழ்த்துவதாய் விவிலியம் சொல்கிறது. எலிசபெத் வாயிலாக கடவுள் இயேசுவை 'ஆண்டவரின் தாய்' என்கிறார்.

அன்னை மரியே 'இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னை பேறுபெற்றவர் என்பர்' என்கிறார். விவிலியம் சொல்வதெல்லாம் இறை ஏவுதல் என்றும், தூய ஆவியின் ஏவுதல் என்றும் கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்.

இயேசு சிலுவையில் உயிர் பிரியும் தருணத்தில் சீடரிடம் 'இதோ உன் தாய்' என்றது மனுக்குலத்துக்கே அவரைத் தாயாக்குவது போல தான். சீடர்களுக்கு இயேசுவழங்கும் அறிவுரைகளை நமக்கே வழங்கப்படும் அறிவுரைகளாக நாம் ஏற்றுக் கொள்ளும் போது, சீடரிடம் ஒப்படைத்த அன்னையை நம்முடைய அன்னையாய் பாவிப்பதே பொருத்தமாகும்.
அப்படி உலகெங்கும் பல்வேறு அன்னை மரியாள் ஆலயங்கள் மிகப்பெரிய வசீகரத்தோடும், புகழோடும் நிலைபெற்றிருக்கின்றன. அந்த ஆலயங்கள் பல்லாயிரம் மக்களை ஆசீர்வதித்திருக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை. அன்னை மரியாள் மக்களுக்கு காட்சி தந்த இடங்களிலெல்லாம் அவருக்கு ஆலயங்கள் எழுப்பப்பட்டன. வேளாங்கன்னி, பாத்திமா, உவரி என தமிழக மாதா ஆலயங்கள் பெரும்பாலும் மரியாள் காட்சி கொடுத்த இடங்களில் எழுப்பப்பட்டவையே.
அப்படிப்பட்ட பிரமிப்பூட்டும் ஆலயங்களில் ஒன்று ஜெர்மனியின் கேவலார் ஆலயம். இதுவும் அன்னை காட்சி கொடுத்த பின்னணியில் எழுப்பப்பட்டது என்கிறது வரலாறு. 1641 ல் மெக்கேல் ஸ்ரோஷ் என்பவருக்கு மாதா குரல் மூலமாகவும், காட்சி மூலமாகவும் தரிசனமானதன் விளைவு தான் இந்த ஆலயம். 375 ஆண்டுகளாக இந்த ஆலயம் கம்பீரமாய் காட்சியளிக்கிறது.

மாதா ஆலயங்களுக்கு ஒரு சிறப்பு தகுதி உண்டு. பிற மத மக்கள், குறிப்பாக இந்துக்கள், அதிகமாக வருகின்ற கிறிஸ்தவ ஆலயம் மாதா ஆலயம் தான். அன்னையின் வடிவில் ஆண்டவரைத் தரிசிக்கும் மனப்பாங்கு அவர்களுக்கு இயல்பிலேயே உண்டு. தங்களுடைய மனதின் சோகத்தை மாதாவிடம் கொட்டி விடும் சிந்தனையே அவர்களை இந்த ஆலயங்களுக்கு அழைத்து வருகிறது.

கேவலார் ஆலயமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆண்டுக்கு பத்து இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற இந்த ஆலயத்தில் வருபவர்களில் கணிசமானவர்கள் பிற மத சகோதரர்கள் தான்.

இரண்டாம் உலகப்போரின் போது எதிரிகளின் குண்டு வீச்சுக்கு இலக்கானது. ஆனாலும் மக்களின் பிரார்த்தனைகள் அந்த குண்டுகளை வெடிக்காமல் செய்தன. போர்க்காலத்தில் வெளிநாட்டுப் பயணிகளை தங்க வைக்கும் இடமாகவும் இந்த ஆலயம் பயன்பட்டது. இந்த ஆலயத்திலுள்ள மாதாவின் படம் உண்மையான அன்னை மரியா படம் என்று பக்தர்களால் நம்பப்படுகிறது.
இந்த ஆலயம் கட்டப்பட்ட பின் பல்வேறு மாற்றங்களையும், விரிவாக்கங்களையும் கண்டுள்ளது. இன்று பார்வைக்கும், மனதுக்கும் இதமாகவும் வசீகரமாகவும் இருக்கின்ற இந்த ஆலயம் மாதா ஆலயங்களில் ஒரு மகுடம் என்றால் மிகையல்ல.

ஆன்மீக சிந்தனையுடையவர்களுக்கும், கலாரசனை உடையவர்களுக்கும் தவிர்க்கக் கூடாத இடமாய் கம்பீரம் காட்டுகிறது இந்த ஆலயம்.






S.J. ASIAN - AFRO STORE








உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்

பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப் பயனடையுங்கள்.

**Mannheim**
S1 - 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

**Ludwigshafen**
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de




Indo Afro Travels
68161 Mannheim

உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட
சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு
எம்மை நாடுங்கள்.



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€99
மட்டுமே
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
£/€99
மட்டுமே
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
பன்னாட்டு நேரங்களில் உங்கள் மனங்கவர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள்
INDIA
UK
EUROPE
INCLUDED
TENT KOTTA
1000க்கும் அதிகமான Tamil திரைப்படங்கள்
EROSNOW
6000க்கும் அதிகமான Hindi & Tamil திரைப்படங்கள்
7000க்கும் அதிகமான TAMIL & HINDI திரைப்படங்கள்
GERMANY
069 1200 7102
UNITED KINGDOM
0207 132 2727
www.lycatv.tv



# கட்டிக் கொள்ளத் தோன்றவில்லை...

சதைக்குத்தான் எப்பவுமே விலை
இருக்கிறது - சருமம் ஈரப்பதன்
இழந்தால் உடம்பும் குப்பையாகி விடுகிறது.

விலங்குகள் என்றால் தோலை பிய்த்து
தான் தின்னும் - அவள் எப்படி எல்லாம்
அவஸ்த்தை பட்டிருப்பாள்.

கண்ணீர் வரும் போது அதை காட்டி கொள்ளாமல்
எச்சில் தடவ வேண்டிய நிர்ப்பந்தம் - எவ்வளவோ
அவளுக்கு ஏற்பட்டிருக்க கூடும்.

அற்ப சுகத்திற்காக அவள் உடப்டை
கிழித்தவர்கள் எல்லோரும் - அவள் இதயத்தில்
ஆணி அடித்து விட்டு போனவர்கள் தானே...

அந்த காயம் ஆறும் முன்னரே
திரும்பவும் - இன்னொருவன்
புணரும் கொடுமை...

இந்த மோசமான சூழ்நிலையினுள் மோகத்தில்
முழுமையடைவற்காக - அவளுக்கு காதல்
கடிதம் எழுதியவர்களும் இருக்கிறார்கள்.

நிலவை மிரட்டி பகலில்
வெளிச்சம் பருகியவர்கள் - இரவில்
அதை எப்படி எரித்திருப்பார்கள்.

காமத்திற்கும் வயது ஒய்வு இருக்கிறது
என்றே நானும் நினைத்திருந்தேன் - ஆனால் அந்த
கிழவியிடமும் இரை தேடி அலைகிறதே நாய்கள்.





# என்னை உனக்கு நினைவிருக்கிறதா...

என்னை உனக்கு நினைவிருக்கிறதா...
தயவு செய்து கொஞ்ச நாட்களுக்கு முன்னரான
ஞாபகங்களை மீட்டிப் பார்

அவ்வள்வு சீக்கிரம் நீ மறந்திருந்தாலும்
நான் கொடுக்கும் மேலதிக தகவல்கள் சில
இலகுவாய் என்னை உனக்கு அடையாளம்
காட்டும் என நம்புகிறேன்.

ஒரு கோப்பி குடிப்பதாகவே சந்தித்தாலும்
அன்றைய நாள் முழுக்கவும் உனக்காகவே
செலவழிப்பேனே...

பின் இருக்கை கிடைத்தால் மட்டுமே
சினிமா பார்க்க போவோமே...

கடலோர மணலினில் மணிக் கணக்காய்
ஒரு குடையின் கிழ் உட்க்ருவோமே...

விடியும் வரை தொலை பேசியிலே
தொங்கிக் கொண்டிருப்போமே...

எப்போதும் பிரிய மாட்டோம் என்று
பெயர் தெரிந்த எல்லா கடவுள்களின் மீதும்
சத்தியம் பண்ணுவோமே..

யாரும் இல்லை என்றதும் உடனே
உன் வீட்டுக்கு ஓடி வருவேனே...

இப்போது கண்டு பிடித்து விட்டாயா
நான் யார் என்று...

இல்லை என்றால் மன்னித்துவிடு
மற்றைய தகவல்களை என்னால்
எழுத்தில் தர முடியாது இருக்கிறது.



நெடுந்தீவு முகிலன்

**புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம். யேர்மனி**

## கிராமிய பூபாளம்

**அன்பான எம் புங்கையூர் கிரமாத்து உறவுகளே**

வரும் **30.09.2017** அன்று நடைபெற இருக்கும் புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் கிராமிய பூபாளம் என்னும் கலைமாலைப்பொழுது நிகழ்ச்சியில் எம் புங்குடுதீவு மண்ணைச் சேர்ந்த யோமனியில் பிறந்து சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற மாணவர்கள் ( தற்போது ஐரோப்பா நாடுகளில் எங்கு வாழ்ந்தாலும்) எம் விழா மேடையில் கௌரவிக்கப்பட உள்ளனர். அவர்கள் அதற்கான தங்கள் கல்வி தகைமைக்கான சான்றிதழை **30.08.2017** க்கு முன்னர் பிரதிபண்ணி கீழ் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Mahalingam Kanesu
Gustav-bohm-Str 67
58256 Ennepeptal / Germany- e.mail:ptt.sarvodayam@hotmail.com




# கத்தியின்றி இரத்தமின்றி கொலை

கௌசி



ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்து வருகின்ற ஆண்களின் தற்கொலை, இயற்கை இறப்புக்களுக்கு அவர்களின் மனைவி, பிள்ளைகளே காரணம் எனக் குற்றச்சாட்டுக்கள் வலுவாக அதிகரித்து வருகின்றது. கத்தியின்றி, இரத்தமின்றி கொலை நடைபெறுகின்றது என பெண்களில் பழி போடப்படுகின்றது. இக்கட்டுரை இது பற்றிய ஆய்வுக்குட்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் பிறந்து வளருகின்ற ஆண்பிள்ளைகள் பற்றிய கணிப்பீடு இக்கட்டுரையில் இடம்பெறவில்லை.

ஆண்களின் இறப்பு வீதம் ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்துக்கொண்டு போவது தற்பொழுது கவலைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. இலங்கையிலிருந்து 90 சதவீத பெண்கள் திருமணம் செய்து, அல்லது திருமணம் செய்வதற்காக ஐரோப்பிய நாடுகளுக்குக் குடி புகுந்த பெண்களாகவே காணப்படுகின்றனர். இவர்களில் அதிகமானவர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

வீட்டுச் சூழலில் அடங்கி ஒடுங்கி வாழ்ந்தவர்களுக்கு திடீரெனக் கிடைக்கின்ற சுதந்திரம் அவர்களுக்கு கட்டுக்கடங்காத சுதந்திரத்தை அளிக்கின்றது. இதைவிட முற்றுமுழுதாக பெண்களிடமே பழி போட்டுவிட முடியாது. தனிமையில் இந்நாடுகளில் வாழ்ந்த ஆண்கள் பொழுதுபோக்குக்காக நண்பர்களுடன் குடிக்க ஆரம்பித்துப் பின் குடிக்கு அடிமையாகிவிடுகின்றனர். தமது இப்பழக்கத்தை மறைத்து தாயகத்திலிருந்து பெண்களைத் திருமணம் செய்து அழைத்து வருகின்றனர். கணவனிடம் காணப்படும் இப்பழக்கம் பற்றி அறியாமலோ வாழ்க்கையிலேயே குடியை வெறுக்கும் ஒரு பெண்ணாகவோ இருந்து, ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தபின் இதனை அறியும் போது தனது வெறுப்பை கணவனில் காட்டத் தொடங்குகின்றாள். இது காலப்போக்கில் பெரிய பூதாகரமாகின்றது. போதைக்கு அடிமையாகும் ஆண்கள் அளவுக்கதிகமாகக் காட்டுகின்ற அதிகாரம், ஆண்களிடம் பெண்களுக்கு ஒரு வெறுப்பு நிலையை ஏற்படுத்துகின்றது. மூர்க்கமாகத் தமது கோபத்தைக் காட்டுவதும், கையில் கிடைப்பதைக் கொண்டு அடிப்பதும், என வன்முறையில் ஈடுபடும்போது வாழ்க்கை என்பது ஒருமுறையே அதை ஏன் இப்படி நரகவாழ்க்கையாக வாழ வேண்டும் என்று நினைக்கும் பெண்கள் கணவன்மாரை விட்டு தனியே வாழ முற்படுகின்றார்கள்.

அதேவேளை திருமணமாகிய பின்னர் குடியை ஆரம்பித்து அளவுக்கதிகமாகக் குடிக்கும் ஆண்கள் தாம் குடிப்பதற்கு பெண்கள்தான் காரணம் எனக் குற்றம் சாட்டுகின்றனர்.

இங்கு வருகின்ற போது அப்பாவிகளாக கணவனுக்குக் கட்டுப்பட்டவர்களாக வாழ்க்கையை புலம்பெயர்வில் பெண்கள் ஆரம்பிக்கின்றனர். காலப்போக்கில் மனைவிமாரின் புத்திசாலித்தனத்தை அறிந்த ஆண்கள் அவர்களை முன்னிலைக்குக் கொண்டு வருவதற்காக முதலில் மொழியை ஓரளவாவது கற்பதற்கு பாடசாலைக்கு அனுப்புகின்றார்கள். இதில் திறமைசாலிகள் வென்று விடுகின்றார்கள். முடியாதவர்கள் படிப்பென்ற பேச்சுக்கே இடமின்றி வீட்டுக்குள்ளேயே அடங்கிவிடுகின்றார்கள். பிள்ளை பெறும் இயந்திரங்களாக மாறி பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்களைப் பாடசாலைக்குக் கொண்டு செல்வதற்காகவும் மற்றைய கடமைகளைச் செய்வதற்காகவும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுகின்றனர். இக்காலகட்டத்திலே உலகத்தையும் பிள்ளைகளை வளர்ப்பதையும் கற்றுக் கொள்ளுகின்றார்கள்.

இக்காலகட்டத்திலேயே பெண்களுக்கான ஆசைகள் அளவுக்கதிகமாக உயர்கின்றது. மற்றையவர்கள் போலத் தாங்களும், மற்றைய பிள்ளைகளைப் போலத் தமது பிள்ளைகளும் இருக்க வேண்டும் என்ற அபரிவிதமான ஆசை மேலோங்குகின்றது. தமது தகுதி பற்றி நினைத்துப் பார்க்காது பிள்ளைகள் விரும்புகின்ற விலையுயர்ந்த பொருட்களை வாங்கிக் கொடுக்கும்படியும் மற்றைய பிள்ளைகள் செல்கின்ற விளையாட்டுக்கள், கலை வகுப்புக்கள் என்று எல்லாவற்றையும் தமது பிள்ளைகளும் கற்க வேண்டும் என்ற நச்சரிப்புகளை கொடுக்கின்றனர். இவ்வாறான சூழலில் கணவன் 2 அல்லது 3 வேலை பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இங்கு மனைவியே குற்றவாளி ஆகின்றாள். கஷ்டப்பட்டு உழைத்து மனைவி, பிள்ளைகளைக் கவனிக்கும் ஆண்கள் தமது குடும்பம் உயர்வான இடத்திற்கு வரப் போகின்றது எனக் கற்பனை செய்கின்றான். மாடு போல் உழைப்பவனுக்கு வீட்டுக்கு வந்ததும் புல்லுப் போடுபவர் கண் விழித்து இருப்பது அருமை. பிள்ளைகளை அடுத்தநாள் பாடசாலை அழைத்துச் செல்லவேண்டும் என்ற காரணத்தைக் காட்டி சோறை ஆக்கிப் போட்டு சுருண்டு படுத்துவிடுவாள். களைத்து வீடு வரும் கணவன் களைப்பு நீங்க ஒரு கிளாஸ் மதுவுடன் தனது உணவை அடைந்துவிட்டு அப்படியே உறங்கிவிடுகின்றான். ஒரு கிளாஸ் 2, 3, என்று போத்தல் கணக்கிற்கு உயர்கின்றது. இதுவே திருமணத்தின் பின் மதுவுக்கு அடிமையாகும் அநேகமான ஆண்கள் நிலை.

காலப்போக்கில் பிள்ளைகள் வளருகின்ற போது அப்பா குடிச்சுக் குடிச்சுக் கெட்டுப் போகிறார். இந்த மாட்டைத் திருத்த முடியாது. இது இப்படியே கிடந்து செத்துப் போகட்டும் என்று பலவாறாகப் பிள்ளைகளுக்கு அருகிலே வைத்து தந்தைமாரைப் பற்றிய தவறான எண்ணங்களைப் பிள்ளைகள் மனதில் பதியவைப்பது தாயாகத்தான் இருக்க முடியும். இதனால் பிள்ளைகள் தந்தையை விட்டு விலகி இருக்கின்றனர். தந்தை இல்லாத சமயத்திலே, தந்தையில் பாசத்தையும் மரியாதையையும் சொல்லிக் கொடுத்து, தந்தையின் அர்ப்பணிப்புக்கள் பற்றித் தெரியப்படுத்தி வளர்க்க வேண்டிய பாரிய கடமையை மனைவி என்பவள் மறந்துவிடுகின்றாள்.

தொடர்ச்சி 24 ம் பக்கம்



# தொலைக் காட்சி நாடகங்களும்
# தொலைந்து போகும் நாட்களும்



என்ன நண்பர்களே, தொலைக்காட்சி தொடர்கள் ,இல்லையென்றால் நாள் கடந்து செல்வதே கடினமல்லவா? தலையே வெடித்துவிடும்.
நானும் தொலைக்காட்சித் தொடர்களைப் பார்ப்பவர். என்னால் உங்கள் அனைவரையும் புரிந்துகொள்ளமுடியும்.
ஆனால் ,இத்தொடர்கள் வாழ்க்கையாக மாறிவிடக்கூடாது. நான் கூறுவது சரிதானே?





வீட்டுவேலைகள் செய்யும் பெண்கள் ஓய்வு நேரங்களில் ,இத்தொடர்களைக் கண்டு மகிழ்கிறார்கள். அவர்களின் பொழுதுபோக்காக, இருக்கின்றன. பிரச்சினைகளை மறக்கவும் செய்கின்றன, இத்தொடர்கள். ஒவ்வொரு நாட்களும் தொடர்கள் பார்க்கும் நேரம் வரும் வரை கார்த்திருப்பதும், அந்நேரம் வந்தவுடன் படபடப்போடு தொலைக்காட்சியைப் பார்ப்பதும் அருமை தான்.
அனைவரும் சிரிப்புடன் வாசித்துக்கொண்டிருக்கிறீர்களா?
நேரம் போவதே தெரியாது.
அதே போல் முடிந்தவுடன் தொடரும் அல்லது மலரும் என்று வரும் பொழுது கவலையாக ,இருக்கும். என்றாலும்
காத்திருப்பதும் நன்றாக ,இருக்கும். சில சமயங்களில் கதையைச் சுற்றி வளைத்துக் கொண்டு செல்லும்போ்து கோபம் வரும். தொடர் என்றால் தொடர்ந்து கொண்டே ,இருக்கும் கதை அல்லவா!

தொலைக்காட்சித் தொடர்கள் மூலம் நாங்கள் வரலாற்றுக் கதைகள் மற்றும் ,இறைநெறி, கலாச்சாரம் சார்ந்த விடயங்களைக் கற்றுக்கொள்ளலாம். சிறுவர்களுக்கும் கூட ,இருக்கின்றன.
ஆனால் வெளி உலகம் தெரியாமல் தொலைக்காட்சித் தொடரை மட்டுமே பார்ப்பவர்கள் தயவு செய்து கவனியுங்கள்.
அது தவறு அல்லவா?
வீட்டுவேலைகளும் எதுவும் செய்யாமல்...அதற்குள்ளே முடங்கிக் கிடப்பது சரியா? தொலைக்காட்சிக்கு முன்னாலே ,இருப்பதும், தொடர்களைப் பற்றி மட்டுமே உரையாடுவதும் சரியா? மனதிற்கும் உடலுக்கும் நன்மை கிடைக்குமா? நாட்களும் கடந்துசெல்லும். நாட்களைப் பயன் உள்ளதாக மாற்றிக்கொள்ளுங்கள்!



றஜினா தருமராஜா

எதனையும் சுருங்கச் சொல்லி புரியவைக்கும் புதுயகத்தில், மீண்டும் ஒரு நீட்டி முடக்கும் பழையயுகம் இந்த நாடகங்கள் மூலம் மீண்டும் அரங்கேறுகிறதோ என்ற ஐயம் தோன்றவே செய்கின்றது.
இந்தியாவின் சில கலாச்சாரங்களும்,
பண்பாடுகளும் எமது பண்பாடாக .
நாம் எண்ணிக்கொள்ளும் வண்ணம்,
நாடகங்கள் பாரத்துப்பார்த்து அவை மனதில்
பதியப்பட்டும் விடுகின்றன.
வெளிநாடுகளில் வாழ்கின்ற நாம்
மட்டும்தான் நாடகத்தில்
நாட்களைக் கடக்கின்றோம் என்று
சொல்வதற்கில்லை.





இங்கு மட்டுமல்ல தாயகத்திலும் அடுப்படியில் பல சட்டிகள் அடிப்பிடிக்கின்றன. விளம்பர இடைவேளைகளில்தான் வீட்டுக்கு வரும் விருந்தினர் அடிக்கும் மணியே அங்குள்ள சிலரின் காதில் விழுகின்றது.
நான்கு நாய் வளர்த்தாலும் அவற்றின் குலைப்பையும் தாண்டி, இந்த நாடகங்கள் நடக்கும் நேரம் ஆடு,மாடு, கோழிகள் தாயகத்தில் திருட்டுப் போகின்றன. இந்த திருட்டுக்கு வாணி ராணியும் உடந்தை என்று தான் பொலிசில் புகார் செய்ய வேண்டும். இன்று நாம் பெற்ற உலக அறிவினையும், வசதிகளையும் சரியான வழியில் பயன்படுத்தி நம்வாழ்வில் வெற்றி கொள்வோம். நாடகங்கள் நடகங்களாகவே இருக்கட்டும், அதுவே எமது வாழ்வாக வேண்டாம்.


கேவலார் அன்னை மரியாவின் திருப்பூசை வளாகத்தில்
Gopara Gnanam வழங்கும்
12.08.2017 சனிக்கிழமை
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மாபெரும் அதிரடி
மலிவு விற்பனை!

திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி


சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

AMMA's food
Sri Lankan & South Indian Specialities
அம்மா'ஸ் உணவகம்
அமைதியாகவும், ஆனந்தமாகவும், பிரியாணி,
கொத்துறொட்டி, இடியப்பக்கொத்து.
தோசை, இட்டலி, மசாலாத்தோசை, பாலப்பம்.
இன்னும் ...நீங்கள் விரும்பியவகை
உணவுகளை உண்டு மகிழ்ந்திட
Amma's Food
சுடச் சுட சுவையுடன்
அம்மாவின் சமையலுக்கு
ஈடானது எங்கள்
உணவுகள்!

Rheinische str.80 A - 44137 Dortmund Tel:0231 33 89 86 91






மழை அழகாய் இருந்தது. சுடும் வெயிலும் கூட அழகாய்தான் இருந்தது. மலர்களும் அழகழகாய் இருந்தன. விழும் இலைகளும் கூட அழகாய்தான் இருந்தன.கவிதைகள் அழகாய் இருந்தன. வாழ்க்கை மட்டும் கவிதை போல அழகாய் இருக்கவில்லை.அவள் எழுதிய...

நான்
யார் யாருடன் பேசலாம், யார் யாருடன் பேசக் கூடாது
என்பதையெல்லாம், அவனேதான் தீர்மானிக்கிறான்
தான்
யார் யாருடனெல்லாம்
உறவு வைத்திருக்கிறேன் என்ற விடயத்தில்
நான் தலையிடவே கூடாது என்ற
நிபந்தனைகளைச் சற்றும் தளர்த்தாமல்...

என்ற கவிதை அழகென்றும், அருமை என்றும் நூற்றுக் கணக்கான பின்னூட்டங்களும், விருப்பக் குறிகளும்.

நிலத்தில் சிதறியிருந்த சோற்றுப் பருக்கைகளையும், சுவரில் ஒட்டியிருந்த மீன்குழம்பின் கறைகளையும் - சமைப்பதற்கு எடுத்த நேரத்தையும் விட, அதிகம் நேரம் எடுத்து துடைத்த அவளது மனதின் வலி பற்றி கவிதை படித்த யாருக்கும் தெரிந்திருக்காது.

எல்லாம் அந்தத் தொலைபேசி அழைப்பால் வந்தது. பார்த்துப் பார்த்து அவனும் இவன் சாப்பிடும் நேரந்தான் அழைக்க வேண்டுமா? அழைத்தவன் அவளது தம்பி வீட்டில் இல்லை என்று அவள் சொன்னதும் பேசாமல் அழைப்பைத் துண்டித்திருக்கலாம்.

„சுகமா இருக்கிறீங்களோ அக்கா?" என்று சும்மா கேட்டு வைத்தான். „ஓம்" என்று சொல்லி விட்டு இவளும் இணைப்பைத் துண்டித்திருக்கலாம். சனி எங்கெல்லாம் குந்தியிருக்கும் என்று பல சந்தர்ப்பங்களில் அவளுக்குத் தெரிவதில்லை. „நீங்களும் சுகமா இருக்கிறீங்கள்தானே..?" அவள் கேட்டு முடித்தாளோ, இல்லையோ அவளுக்கே இன்னும் தெரியவில்லை. ஹணொங்' என்ற சத்தமும், தொடர்ந்து படாரென்று உடையும் சத்தமும். நெஞ்சு ஒரு தரம் திடுக்கிட்டது. திரும்பினாள். நிலமெல்லாம் சோறு. சுவரில் மீன்குழம்பு வழிந்து கொண்டிருந்தது. மீன் துண்டுகள் பிய்ந்து சிதைந்து ஆங்காங்கு சிதறிக் கிடந்தன.

கூடவே கீரை, கத்தரிக்காய் வெள்ளைக்கறி...
என்று பார்க்கச் சகிக்கவில்லை. அவளால்
உடனடியாக பதறலில் இருந்து மீளமுடியவில்லை.

தம்பியின் நண்பனைச் சுகம் விசாரித்ததால்
அவனது வாயிலிருந்து உதிர்ந்து கொண்டிருந்த
வார்த்தைகளில் அவள் ஒரு விலைமாதுவையும் விடக் கேவலமாக உருண்டாள், பிரண்டாள். தாங்க முடியாமல் கூசினாள். கூனிக் குறுகினாள்.

அன்று அவள் சாப்பிடவில்லை. அது ஒன்றும் பெரிய பிரச்சனையில்லை. மினைக்கெட்டுச் சமைச்சதை கூட்டி அள்ளிக் கொட்டும் போதுதான் மனசுதாங்காமல் ஒரு தடவை அழுது தீர்த்தாள்.

22 ம் பக்கத் தொடர்ச்சி

# கத்தியின்றி இரத்தமின்றி

தந்தையை ஒரு பிள்ளை எதிர்த்துப் பேசுகின்றது என்றால், தாய் பேசிய தாக்கமே பிள்ளை மனதில் நின்று வெளிப்படுத்துகின்றது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்

தந்தை பற்றிய தவறான எண்ணப் போக்கு மனதில் பதிந்த பிள்ளைகள் தாயுடனேயே தாய் சொல்வதே உண்மை என்று கேட்டு தந்தையை வெறுக்கத் தொடங்கும். மனைவி, பிள்ளைகளுக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த ஆண், கடைசியில் குடியை மணந்து அதற்குத் தன்னை அடிமைப் படுத்துகின்றான். இதனால், நோய்வாய்ப்படுகின்றான். நோயில் துன்பப்படுகின்ற கணவனின் அருகில் இருக்க வேண்டிய வாழ்க்கைத் துணையானவள் இவ்வாறான குடித்துக் குட்டிச் சுவரான கணவனுடன் வாழமுடியாது என்று சொல்லி அவனை ஒதுக்கிவிடுகின்றாள். தன் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தனியே வாழுகின்றாள். இவ்வாறான பல குடும்பங்களைக் காண்கின்றோம்.

விவாகரத்து எடுத்துவிட்டால் அரசாங்கம் தனக்குப் பணம் தந்து உதவும் என்ற துணிச்சலுடன் தனியே வாழும் பெண், அவனுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளைக் கூடச் சரியான நேரத்தில் கொடுக்காது விடுவதும், தேவையான உணவுவகைகள் உண்ணக் கொடுக்காது விடுவதும் ஒரு கொலை முயற்சி என்றே சொல்ல வேண்டும். புலம்பெயர்வில் அதிகமான பிள்ளைகள் தாயார்மாருடன் சேர்ந்து கொண்டு தந்தைமாரை வெறுப்பவர் களாகவே இருக்கின்றனர். பிள்ளைகளுக்காக குடும்பப் பொறுப்பை மனைவியிடம் விட்டுவிட்டு உழைப்பதில் கவனம் செலுத்திய கணவன் இறுதியில் குடும்பமே இல்லாமல் இருப்பதுதான் இங்குள்ள சூழ்நிலை. சாதாரண சேட்டைத் தான் அணிந்து, இரவுபகல் வேலை பார்த்து மனைவிக்கு 10 பவுணில் நகையும், பட்டு ஆடையும், பிள்ளைகளுக்கு அப்பிள் கைத்தொலை பேசியும் அவுடிக் காரும் வாங்கிக் கொடுத்து அப்பாவிகளாக வாழுகின்ற ஆண்கள் நிலை பரிதாபத்துக்குரியது.

இதேவேளை மனைவியை அடக்கி ஆள நினைக்கும் ஆண்வர்க்கத்தின் பக்கத்தில் உலகைப் படித்த பெண்கள் அடங்கி வாழ மறுப்பது யதார்த்தம். ஆண்கள் போலே தமது கவலையை மறைக்கத் தாமும் குடிக்கு அடிமையானால், இக்கதை மாற்றிப் பேசப்படுமோ? என்ற வினாவினை எழுப்புகின்றாள் பெண். குடித்துத்தான் கவலை மறப்போம் என்பது போலியான வார்த்தை. தனியே வேறு பொழுதுபோக்குகளை பழகிக்கொள்ளலாமே என்றால், பாவமும் பழியும் ஆண்களிலேயே அதிக வந்து விழுவதாலும் பெண்ணைப்பற்றிய அனுதாபம் சமுதாயத்தில் அதிகமாக இருப்பதாலும் பிரச்சினைகளை மறைத்து இணைந்து வாழ்வதாக வெளி உலகத்திற்குக் காட்டி மனதால் பிரிந்து வாழ்கின்ற குடும்பங்கள் புலம்பெயர்வில் அதிகமாகக் காணப்படுகின்றன.



ஆசைகளை அளவுக்கதிகமாக வைத்தால் வாழ்க்கையை இழக்கவேண்டியே வரும். மனைவி கணவனில் வைக்கின்ற உண்மையான அன்பு அவன் கவலைகளை மாற்றச் செய்யும் என்று நான் கருதுகின்றேன். அந்த உண்மையான அன்பை மனைவி தருவதற்கேற்றவாறு வாழ வேண்டியது கணவனின் கடமையாகின்றது. துன்பப்படுபவரைக் கண்டால் இரக்கப்படும் நாம், நமது கணவன் நோயால் வாடுகின்றபோது கண்டு கொள்ளாமல் விடுவது எவ்வளவு அரக்கத்தனம். அவனில் ஆயிரம் பிழைகள் இருந்தாலும், அவன் ஒரு உயிர். ஒன்றாக வாழ்ந்து பிள்ளைகளை அவன் மூலம் பெற்று வளர்த்தோம் தானே. இறுதிக்காலத்திலாவது மன்னிப்பு என்ற அளப்பெரிய ஆயுதத்தை ஏந்தி கடைசி காலத்தில் பக்கபலமாக இருக்கலாமே. பெண்கள் என்றால் பொறுமை என்னும் இலக்கணத்தை ஏற்று மனிதப்பண்பில் வழுவாது வாழ்ந்து பாசத்துடன் வாழலாம் அல்லவா? உயிர் என்பது விலைமதிக்கமுடியாதது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.


விழா மண்டபம்:
EFES Festsaal
Riedingerstrass 10
45141 Essan Germany
மிருதங்க அரங்கேற்றம்
செல்வி கார்த்தனா தனபாலசிங்கம்
பிரபல மிருதங்கவித்துவான் திரு.ச.பிரணவநாதனின் மாணவியும்
எங்கள் புதல்வியுமான **செல்வி கார்த்தனா தனபாலசிங்கம்** அவர்களது
மிருதங்க அரங்கேற்றம் **02.09.2017** சனிக்கிழமை காலை 11.00 மணியளவில்
யேர்மனியில் எசன் மாநகரில் நடைபெற உள்ளது.
அறிவிப்பாளர்: அப்துல் ஹமீட் (பிரபல வானொலி அறிவிப்பாளர்.) சாரா யேர்மனி
அத்தருணம் யாவரும் வருகைதந்து
அரங்கேற்றத்தினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
அன்புடன்
அன்புடன் **பாரதா தனா**
தமிழகத்தில் இருந்து பிரபல பாடகி சாருலதா மற்றும் கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்கள்


விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# ஆறாவது விரல்!

வ.சிவராஜா





நம் ஒவ்வொருவரின் ஆறாவது விரலாக ஒட்டி உறவாடுவது நாம் எழுதும் பேனா என்று சொல்லலாம்.

அ...ஆ...எழுதிப்பழகிய பள்ளிப்பருவம் முதல் உயில் எழுதும் வாழ்க்கையின் கடைசிக்காலம்வரை நம் இணைபிரியாத நண்பனாகக் கூட வரும் வரம்பெற்றது இந்தப் பேனாதான்.


மனிதன் எழுதப் பயன்படுத்திய முதல் சாதனம் எது தெரியுமா?..பறவையின் சிறகுதான். சிறகின் முனையை மையில் நனைத்து எடுத்து எழுதி வந்தனர். அந்தக்காலத்து அரசர் முதல் ஆண்டிவரை இந்தச் சிறகையே எழுதுவதற்கு ஆரம்பபடியாகக் கையாண்டனர் என்பது வரலாறாகும். அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த காப்புறுதி விற்பனையாளர் எல்.ஈ.வாட்டர்மேன் என்பவர்தான் முதல் பவுண்டன் பேனாவை உருவாக்கினார். 1884ல் இந்தப் பேனா கண்டுபிடிக்கப்பட்டது.


அடுத்த 60 ஆண்டுகாலத்துக்குள் இந்தப் பவுண்டன் பேனாதான் உலகில் ஆதிக்கம் செலுத்தியது. பார்க்கர், ஷெப்பர், வாட்டர்மேன், வால்எவர்ஷாப் ஆகிய நான்கு நிறுவனங்களின் பவுண்டன் பேனாக்கள்தான் அந்தக்காலத்தில் மிகப்பிரபலமாக இருந்தன. பேனாக்களில் பல வகைகள் உண்டானாலும் பவுண்டன் பேனா, போல்ட் பொயின் பேனா ஆகிய இருவீகைப் பேனாக்களை நாம் எழுதப் பயன்படுத்துகின்றோம். தற்போது பெரும்பாலானோர் பயன்படுத்துவது போல்ட் பெயின் பேனாதான்.

போல்ட் பெயின்ட் பேனா கண்டுபிடிக்கமுன் புழக்கத்தில் இருந்த பவுண்டன் பேனாவின் வரலாற்றைப் பார்த்தால், பறவைகளின் இறகுகளால் பயன்படுத்தப்பட்டுச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகுதான் பவுண்டன் பேனாவின் வடிவம் உபயோகத்துக்கு வந்தது. முதலில் வடிவமைக்கப்பட்ட பவுண்டன் பேனா எப்படி இருந்தது தெரியுமா?.. மையை அடைத்து வைக்க ஏதுவாக கடினமான இறப்பரால் செய்யப்பட்ட குழாயும் அதன் அடியில் நிப்பும் பொருத்தப்பட்டிருந்தது. ஆனால் இந்தவகை பவுண்டன் பேனாவினால் மென்மையாகக் காகிதத்தில் எழுதமுடியாமல் போனது. இந்தப் பேனாவை வைத்து எழுதியதால் மை தாறு மாறாகக் கொட்டி வாட்டமேனின் மதிப்பு மிக்க காப்புறுதி நிறுவன ஒப்பந்தப் பத்திரங்கள் எல்லாம் வீணாகின.

அதனாலேயே வாட்டமேனுக்கு ஒரு சுப்பர் பேனா உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் வலுவாகத் தோன்றியது. அப்படி அவர் வடிவமைத்ததுதான் சரியாக எழுதக்கூடிய பவுண்டன் பேனா. பழைய பவுண்டன் பேனாவில் நிப்பில் ஒரு துளை மற்றும் வேண்டிய மெக்கானிக்கல் விஷயங்களைச் சேர்ப்பதுதான் அவரது ஐடியாகவாக இருந்தது. அதைச் செயற்படுத்திப் பார்த்தார். பவுண்டன் பேனாவும் ரெடியானது.லூயிஸ் வாட்டமன் தனது முதல்(நன்கு எழுத ஏதுவான) பவுண்டன் பேனா கண்டு பிடிப்புக்கான காப்புரிமையை 1884ல் பதிவு செய்தார். 1831ல் மை நிரப்புவதற்காக தானே உறிஞ்சிக்கொள்ளும் தன்மையுள்ள பவுண்டன் பேனாவை ஜான் ஜேக்கம் பார்க்கர் என்பவர் கண்டுபிடித்தார். பின்னாளில் இவர் பெயரில் உருவான பாக்கர் நிறுவனப் பேனாக்கள் மிகவும் பிரபலமடைந்தன.

1938ல் லாஸ்லோ பைரோதனது சகோதரர் ஜோர்ஜ் பைரேவுடன் சேர்ந்து போல்ட் பெயின்ட் பேனாவைக் கண்டுபிடித்தார். ஆஜர்தீனாவிலுள்ள ஒரு நிறுவனம் இந்தப் பேனாவை வியாபாரமாக்கியது.போல்ட் பெயின் பேனாவின் வரலாற்றைச் சிறிது பார்ப்போம். இப்பேனா 1938ம் ஆண்டுதான் உலகிற்கு அறிமுகமானது. கங்கேரி நாட்டுப் பத்திரிகையாளரான லாஸ்லோ பைரோ என்பவர்தான் இந்தப் பேனாவைக் கண்டுபிடித்தார். 1938 ஆண்டுக்கு முன்புவரை பவுண்டன் பேனாதான் புழக்கத்தில் இருந்தது. பத்திரிகையாளர் பைரோ பணியில் இருந்தபோது ஏற்பட்ட ஒரு சிந்தனைதான் (ஐடியா) போல்ட் பெயின்ட் பேனா உருவாகக் காரணமாயிற்று. செய்தித்தாளில் பிரசுரிக்கப் பயன்படுத்தப்படும் மையானது அச்சானதுமே உலர்ந்துவிடும் தன்மை பெற்றிருந்தது. அதைக் கவனித்த பைரோ அவர்கள் இந்த மையைப் பயன்படுத்தும் விதத்தில் ஒரு பேனைவை உருவாக்கலாமே என்று தனது சிந்தனையைத் தட்டிவிட்டார். ஏனெனில் இந்த அடர்த்தியான மையை பவுண்டன் பேனாவில் பயன்படுத்த முடியாது. இந்த மை பவுண்டன் பேனா முனை வழியாக வெளியேறுவது மிக...மிகக் கடினம். ஆகையால் அதற்குத் தகுந்த பேனாவை உருவாக்க வேண்டி இருந்தது. பந்து போன்ற முனை பொருத்தப்பட்ட பேனாவில் இந்த அடர்த்தியான மையை நிரப்பி எழுத வைத்தார் பைரோ. போல்ட் பெயிண்ட் பேனாவும் உருவாகியது.





ஒரு மனிதனுக்கு உற்ற துணையாக இருப்பதும் எத்தனையோ சரித்திர சான்றுகளையும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளையும் விண்வெளி ஆராய்ச்சிகளையும் வைத்திய சாதனைகளையும் மேற்கொள்ள மனிதனின் ஆறாவது விரலாகச் செயற்பட்டுவந்ததும் வருவதும்தான் இந்தப் பேனாக்கள். கல்வியில் உயரவும் காவியம் படைக்கவும், கணக்குப்பார்க்கவும் கண் தெரியாதவர்களுக்கும்கூட இந்தப் பேனாக்கள் உதவி வந்ததுடன் மனிதனின் உடல் அங்கம் போல் உற்ற துணையாக இருந்து செயற்படுவதுதான் இந்தப் பேனாக்கள்.

கால ஓட்டத்தில் கண்டுபிடிப்புக்கள், விஞ்ஞான அறிவியல் வளர்ச்சியால், கணனி தொழில்நுட்ப மேம்பாட்டால் பெனாக்களின் தேவை இல்லாமல் போயிருப்பதுடன் மட்டுப்படுத்தப்பட்டபடியால் பேனாக்களின் புழக்கம் வெகுவாகக் குறைவடைந்திருப்பதுடன் பாவனையும் அருகிவிட்டது. விற்பனை குறைந்துவிட்டது. உற்பத்தி பாதிப்படைந்துவிட்டது. இதனால் மனிதனின் எழுத்தாற்றல் குன்றிவிட்டது.

முன்னைய நமது பாடசாலைக் காலங்களின் உயர்வகுப்புக்களில் பாடங்களுக்குப் பக்கம் பக்கமாக எழுதிக் குவிப்போம் அதுவும் பரீட்சைக்கு விடை எழுதுவதென்றால் மூன்று மணி நேரத்திற்குள் எத்தனை பக்கங்களை சுமார் 30 40 பங்கங்களையும் எழுதிப் பரீட்சையில் வெற்றியும் பெற்றோம் தோல்வியும் ஏற்றோம் இது பழைய கதைதான்.

இன்று...எங்கும் கணனி யுகம், கைத்தொலைபேசி யுகம், என அவசரமாக உருளும் உலகம். இதனால் எழுதுவதையே தொண்ணூறு வீதமானோர் நிறுத்திக் கொண்டுவிட்டனர். பேனாவைப் பாவிப்பதே அபூர்வமாகிவிட்டது. ஏன் பெற்றவர்களுக்கோ அல்லது உறவுகளுக்கோ ஒரு கடிதம் எழுதக்கூட பேனா இல்லாமல் அலைவோர் பல கோடி பேராகிவிட்டது. எத்தனை கோடி வீடுகளில் ஒரு பேனாக்கூட காணமுடிவதில்லை. நம்மவர்களில் படித்தவர்கள் என்று சொல்லபவர்கள்கூட இன்று எழுதமுடியாமல் தத்தளிக்கும் நிலைதான் காணப்படுகின்றது. உயிராக இருந்த பேனா இன்று உருக்குலைந்து தேடுவாரற்ற பொருளாகவே மாறிவிட்டது.

மனிதன் ஒரு இடத்தில் இரண்டு மூன்று மணிநேரம் அமைதியாக இருந்து எழுதுவதால் அவனின் கற்பனை வளம் பெருகுகின்றது. அறிவு அகலமாக விரிவு பெறுகின்றது. ஆற்றல் பன் மடங்காக உயருகின்றது. மேலாக சிந்தனை விரிவடைவதுடன் கையால் நீண்ட நேரம் எழுதுவதால் கையும் ஆடி அசைவதால் ஒருவகை நரம்புத் தளர்ச்சியிலிருந்து பாதுகாக்கப்படுகின்றது. கைக்குப் பயிற்சி கிடைப்பதால் உடலும் ஆரோக்கியம் பெறுகின்றது என நான் சொல்லவில்லை. ஆராய்ச்சியாளர்களும் வைத்தியத்துறையினரும் தெரிவிக்கின்றனர். இது நூற்றுக்கு நூறுவீதம் உண்மையான விடையமாகும். ஆகவே மனிதனில் ஆறாவது விரலாக வாழ்க்கை முழுவதும் எமக்கு உதவும் இந்தப் பேனாக்களை காதலியுங்கள், நேசியுங்கள். எனவே எழுதுவதென்பதை ஒரு போதும் நிறுத்திவிடாதீர்கள். எழுதுவதால் அந்த விடையங்கள் நம் மனங்களில் ஆழமாகப் பதிந்துவிடும். அப்பதிவுகள் யாவும் நமது வாழ் நாட்காலம் முழுவதும் பயன்தரும் என்பதை மறந்து விடாதீர்கள்.



படங்கள் : கோனேஸ் செந்தில். 25.06.2017




## ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத் தேர் திருவிழாவும், வெளிவிழா நிகழ்வும்

18.06.2017







கம் காமாட்சி அம்பாள் ஆலய 25வது வருட வெள்ளி விழாவில் தென் இந்தியாவில் இருந்து வந்த திரு அதியமான் அவர்களும்.தாயகத்தில் இருந்து கோப்பாய் சிவம் அவர்களும் Pforzheim ஆலயத்திலிருந்து சிவ ஸ்ரீ உமாமகேஸ்வரக் குருக்கள் அவர்களும் ஆலய வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கந்து கொண்டு சிறப்புரையாற்றினாகள். இலக்கியச்செல்வர் இந்துமகேஷ் தலைமையில் அம்பாளைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெற்றது. மற்றும் தொண்டரர்கள் உடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.



தங்கரத திருவிழா உபயகாரர்
தர்மலிங்கம் குடும்பம் உரும்பிராய்

படங்கள் : வெற்றிமணி



## உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவில்
## தங்கரதம் வெள்ளோட்டம் 29.06.2017



1000 சிதறுதேங்காய் உடைத்து வழிபாடு


கேவலார் அன்னை மரியாவின்
திருப்பூசை அன்று அங்கு
எமது நிறுவனம்
KERVEN GMBH
வழங்கும்
சிறப்பு விலை !!!
12.08.2017 சனிக்கிழமை

Lebara play
Miss it? Love it? Play it?
TV
ANDROID APP ON Google play
100% LEGAL
HD/SD QUALITY
150 க்கும் மேற்பட்ட டிவி அலைவரிசைகள், 3000திற்கும் மேற்பட்ட திரைப்படங்கள்

KERVEN GMBH
Rheinische Str.64 | Dortmund : DE
www.kerven-gmbh.com
E-Mail:info@kerven-gmbh.com
Germany Tel :0231 17721820 Mob: 0173 8048 459
France Tel: 09 77 18 59 11 Mob: 0754 11 20 20
UK : 0208 123 7558 Mob: 075 34 037 670
lebara.com/play/terms-conditions



# திருமந்திரமும் வாழ்வியலும் 20

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருமந்திரம் கூறும் மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்) (பாகம் 1)





பிராணன் (உயிர்க்காற்று) யாமம் (முறைப்படுத்துதல்) ஸ்ரீ பிராணாயாமம் (உயிர்க்காற்றை முறைப்படுத்துதல்). எல்லா உயிர்களும் மூச்சை உள்ளிழுத்து, வெளிவிடுவதாலேயே உயிர் வாழ்கின்றன. இச்செயல் எமக்குத் தெரியாமலேயே நடந்துகொண்டிருக்கின்றது. இந்த மூச்சை முறைப்படுத்தி நம் ஆயுளை விருத்தியடையச் செய்வதுடன், உடல் உள் உறுப்புக்களை வலுவாக்கி நோயற்ற வாழ்வு வாழலாம். பிரணாயாமத்தை நாடிசுத்தி எனவும் கூறுவர்.

பொதுவாக மனிதர்கள் சராசரியாக ஒரு நிமிடத்திற்கு பதினைந்து சுவாசம் வீதம் ஒரு மணித்தியாலத்திற்கு தொளாயிரம் தடவைகள் சுவாசிக்கின்றனர். இந்தச் சுவாச ஓட்டம் குறையும் போது ஆயுள் நீடிக்கும். யோக, தியானங்களினால் சுவாசத்தை கட்டுப்படுத்தி ஒடச் செய்யலாம். இதையே சித்தர்களும், யோகிகளும் செய்து பல காலம் நோய் இன்றி வாழ்ந்தார்கள். இவற்றைப் பற்றி திருமந்திரத்தில் வரும் பாடல்களைப் பார்ப்போமானால்

பிராணாயாமம் பற்றி மூச்சுக் காற்றுப் பயிற்சி உள்ளவர்களுக்கு மனம் அலை பாயாது ஒருமுகப்படும் என்பதைக் கூறும் பாடல் எண் 564

“ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண்டு ஏறும் குதிரைமற்று ஒன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுந்திடும் தானே”

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுக்கு நாயகனாகவும், அவற்றை ஆட்டுவிக்கும் தலைவனாகவும் பரம்பொருள் ஒருவன் இருக்கின்றான். இந்த உயிர்களைக் கடைத்தேற்ற மூச்சுக் காற்று அல்லது பிராணவாயு என்னும் ஏறி வரும் குதிரை ஒன்று இருக்கின்றது. இந்த மூச்சுக்காற்று இறைவன் திருவடிகளைப் பற்றி இருக்கும் மெய்யன்பர்களுக்கு அடங்கி வசப்படும். இறை பற்றில்லாத பொய்யர்களுக்கு வசப்பட்டு அடங்கி இருக்காது. அவர்களை தலை குப்பறத் தள்ளி விடும்.

மனம் வசப்படும் தினம் பயின்றால் என மூச்சுப் பயிற்சியில் உள்ள பூரகம், கும்பகம், இரேசம் என்னும் மூன்று நிலைகளை கூறும் பாடல் எண் 565

“ஆரியன் நல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகுஅறி வார்இல்லை
கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே”

## மூச்சுப்பயிற்சி முதுமையைத் தடுக்கும்

மனமாகிய பெரியோன் மிகவும் நல்லவன். அவனிடம் இரண்டு குதிரைகள் (இரண்டு மூக்குத் துவாரங்கள் வழியாகவும் உள்ளே போய், வெளியே வரும் மூச்சுக் காற்று) உள்ளன. விரைந்தோடிக் கொண்டிருக்கும் அந்தக் குதிரையை கயிற்றை வீசிப் பிடித்து நிறுத்தும் (மூச்சை உள்ளே இழுத்து பூரகம், நிறுத்தி வைத்து கும்பகம், வெளியேற்றுதல் - இரேசகம்) வழி பலருக்குத் தெரியவில்லை. நுண்ணறிவுடைய ஆசான் துணைக்கொண்டு அவர் கற்பித்த வழிப்படி முயன்றால், அதனை இழுத்து அடக்கி வசப்படுத்த முடியும்.

களிப்பூட்டும் காற்றுப் பயிற்சி எனக் கூறும் பாடல் எண் 566

“புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டால்
கள்உண்ண வேண்டாம் தானே களிதரும்
துள்ளி நடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடை யோர்க்கே”

மூச்சுக் காற்றாகிய குதிரை இருக்கிறதே அது பறவையை விட வேகமாகப் பறந்து திரியும் இயல்புடையது. அந்தக் குதிரையை அப்படி அலைந்து திரிய விடாமல் அடக்கி வசப்படுத்தி விட்டால் மயங்கிக் கிடக்கஇ தன்னை மறந்திருக்கக் கள் குடிக்க வேண்டாம். இன்ப மயக்கம் தானே உண்டாகும். துள்ளித் திரியும் உற்சாகத்தைத் தரும். சோம்பலைப் போக்கும். உண்மை இது. சொல்லிவிட்டோம். புரிந்து கொள்ளக் கூடியவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

பிராணனை வளர்க்கும் பிராணக் காற்று எனக் கூறும் பாடல் எண் 567

பிராணன் மனத்தொடும் பேராது அடங்கிப்
பிராணன் இருக்கில் பிறப்புஇறப்பு இல்லை
பிராணன் மடைமாறிப் பேச்சுஅறி வித்துப்
பிராணன் நடைபேறு பெற்று உண்டீரே”

பிராணன் மனத்தோடு பிரியாது ஒன்றாக இருக்கில் பிறந்து இறக்கின்ற துன்பம் உயிருக்கு இருக்காது. அப்படியில்லாமல் பிராணன் மேல்ச் செல்லாமல் கீழாகச் சென்று மாறி மாறி நடக்கின்ற போது உயிருக்கு பிறப்பு இறப்பு உண்டாகும்.

மூச்சுப் பயிற்சியில் மூன்று நிலைகள் பற்றி பாடல் எண் 568

“ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதில் ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகம் ஆமே”

இடதுபக்க (இடகலை) மூக்குத் துவாரத்தின் வழியாக மூச்சுக்காற்றை உள்ளே இழுப்பது பூரகம் எனப்படும். இது பதினாறு மாத்திரை அளவாம். இழுத்த மூச்சை அறுபத்துநான்கு மாத்திரை அளவு நிறுத்தி வைத்தல் கும்பகமாகும். இடப்பக்க வழியாக உள்ளே இழுத்து நிறுத்தி வைத்த மூச்சை வலப்பக்க மூக்குத் துவாரத்தின் வழியாக முப்பத்திரண்டு மாத்திரைப் பொழுதில் மெல்ல வெளியே விடுதல் இரேசகமாகும். இந்த ஒழுங்கை மாற்றி வலதுபக்க மூக்குத் துவாரத்தினூடாக உள் இழுத்து இடதுபக்க மூக்குத் துவாரத்தினூடாக வெளி விடுதல் வஞ்சகம்

மூச்சுப்பயிற்சி முதுமையைத் தடுக்கும் எனக் கூறும் பாடல் எண் 569

“வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு அளியனும் ஆமே”



இடது பக்க மூக்கின் வழியாக மூச்சுக் காற்றை உள்ளே இழுத்து, வசப்படுத்தி, உள்ளே அடக்க முடிந்தால் உடல் பளிங்கு போல் ஒளி வீசித் திகழும். உடல் முதுமை உற்றாலும் இளமை மாறாதிருக்கும். இந்த முறையை அறிய ஆசிரியனின் திருவருள் துணை இருக்குமானால்இ இந்தப் பயிற்சி உடையவனின் உடல் காற்றை விட லேசாகும். போற்றத்தக்க மேன்மை உடையவனாக அவன் எங்கும் செல்லும் ஆற்றல் உடைய வனாவான்.








## வெற்றிமணி 250 வது இதழ்
















# வெற்றிமணி வரவிற்கு கிடைத்த வரங்கள்!

யேர்மனியில் வெற்றிமணி தனது 250 இதழை கடந்த மாதம் (ஆடி) வெளியிட்டது. வெற்றிமணி பத்திரிகை ஆரம்பிக்கும் போது இத்தனை இதழ்கள் விரியும் என்று எண்ணவில்லை. ஆனால் பத்திரிகை தொடர்ந்து வரும் என்ற நம்பிக்கை இருந்தது.

காரணம் ஒரு நிலையான வேலை எனக்கும் மனைவிக்கும் இருந்தது. எனவே வெற்றிமணி வெளியிட பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்ய வேலை கைகொடுத்தது. இலாப நட்டம் பார்ப்பதில்லை
இஷ்டப்பட்டு கஷ்ட்ப்படுவதால் கஷ்டங்கள் தெரியவில்லை. வியாபார ஸ்தபனங்கள் படிப்படியாக வெற்றிமணிக்கு வெற்றிபடிகளாகின. அதே நேரம் அவர்களது வியாபாரத்திற்கும் வெற்றிமணி வெற்றிப்படிகளாகின. எனது உழைப்பும் ஆண்டவனது அருளும் தந்தையின் ஆசீர்வாதமும் இன்று இந்த நிலையடைய காரணமாகின.

வெற்றிமணிக்கு பண்பான நாரிகமான நண்பர்களும்,சிறந்த வாசகர்களும், தமிழ்பற்றுமிக்க வியாபார ஸ்தாபனங்களும் உண்மையான படைப்பாளிகளும் வாய்த்தது வெற்றிமணி பெற்ற பெரும் வரம்.
வெற்றிமணி 250 இதழ் வெளிவந்ததும் ஒரு பத்து இதழ்களை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு சென்றேன். முதலில் என் கண்ணில் பட்டவர் யாழ்பல்கலைக் கழகத்தில் இருந்து இன்று வரை நட்புடன் இருக்கும் கலைவிளக்கு சு.பாக்கியநாதன் அவர்கள். அவர் வெற்றிமணியின் வளர்ச்சிக்கு இன்றுவரை நல்லாசி தருபவர். அவரிடம் ஆசிபெற்றேன்.

அடுத்து கம் காமாட்சி அம்மன் ஆலயத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சிக்கு சென்றேன். அங்கு 1968 இல் வெற்றிமணியில் கவிதைகள் கட்டுரைகள் எழுதி தன் ஆற்றலை வளர்த்துக்கொண்ட திரு.கோப்பாய் சிவம் அவர்களை கண்டேன். எனது தந்தை அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் 1950 ஆரம்பித்த வெற்றிமணியின் உரம்மிக்க சிந்தனையாளர்களில் அவரும் ஒருவர்.
திட்டமிட்டு ஏற்படுத்திய சந்திப்புக்கள் அல்ல இவை. அடுத்து வெற்றிமணியின் வாசகர்வட்டத்தை பெருக்க காரணமாக இருந்தவர்களின் ஒருவரான எழுத்தாளர் இலக்கியச் செம்மல் இந்து மகேஷ் அவர்களையும் அங்கு காணமுடிந்தது.



தந்தையின் ஆசி

எனவே அவர் வெற்றிமணியின் 250 இதழினை திரு கோப்பாய் சிவம் அவர்களுக்கு அளித்து கௌர வித்தார். அதே போன்று வெற்றிமணி பத்திரிகையின் மற்றுமொரு வெளியீடான சிவத் தமிழ் சஞ்சிகைக்கு எனக்கு உதவி ஆசிரியராக இருந்து உதவும் ஆன்மீகத் தென்றல் திரு த.புவனேந்திரன் அவர்கள் வெற்றிமணியின் 250 இதழினை திரு.கோப்பாய் சிவத்திற்கு அளித்து மகிழ்ந்தார்.
மறுநாள் தாய் நாடு சென்று எனது மதிப்புக்குரிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கு வெற்றிமணியினைக் கையளித்து மகிழ்ந்தேன். அடுத்து நான் கல்விகற்ற தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரிக்கு சென்று அதிபருக்கு சிறப்பு பிரதியினை வழங்கி என் மகிழ்வை பகிர்ந்து கொண்டேன்.

தொடர்ச்சி 30 ம் பக்கம்

SRI OM SHAKTHI ASTROLOGICAL CENTRE



அனைத்து மதங்களும் வரவேற்க்கப்படுகின்ன..
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்.
Pandith: Thulasidasan

9 வது தலைமுறையில் கடந்த காலம் , நிகழ்காலம்,மற்றும் எதிர்காலம் பற்றிக் கணித்தல், மற்றும் முகநாடி கைரேகை ஆகியவற்றிலும் வல்லுனர்.

லட்சுமி பூஜை.இல்லப் பூஜை. சாந்தி பூஜை.செய்துதரப்படும். எதிரிகள் மற்றும் பொறாமைய அனைத்தில் இருந்தும் பாதுகாப்பளிக்கப்படுகின்றது.



மந்திர செய்வினைகள் சூனியம், கெட்ட, ஆவிகள் ஆகியவற்றில், இருந்து விடுதலைபெற்று நிவாரணம் பெற, வாழ்நாள் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. வேதத்தீர்வுகள்.கல்வி, காதல், தொழில்,பதவி உயர்வு, நீதிமன்ற வழக்கு,உடல் நலம், குடும்பப்பிரச்சினை,திருமணம்,காதல் விவகாரம், குழந்தைப்பாக்கியம்,கணவன் மனைவி ஒற்றமையின்மை, இன்னும் பல..

மொழிகள்: தமிழ் இந்தி ஆங்கிலம்.

08:00 am to 8.00 pm Private and confidential

Heiderstr., 45476 Mülheim
(Bushaltestelle: Steinmetzstr)
0049(0)151 63222251
0049(0)152 18133859

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும் புத்தம் புது டிசைன்களில் தங்க நகைகள்
ஒரே இடத்தில் தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும் குறைந்தவிலையில் பயணச்சீட்டுக்கள் மற்றும் இலத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் அனைத்திற்கும் நாடுங்கள்




சித்திரம் Tv
எம்மிடம் கிடைக்கும்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main


Gopara Gnanam
ESTD 1992
25 YEARS
OF SERVICE EXCELLENCE
Dortmund
மாநகரில்
அந்த 7 நாட்கள்
Gopara Gnanam ஸ்தாபனத்தாரின்
வெள்ளி விழாக் கொண்டாட்டம்
02.09.2017-09.09.2017
JACKPOT
வாருங்கள்
உங்களுடன் கைகோர்த்து
இரண்டு தலைமுறை
கடந்து வந்துள்ளோம்!
உங்கள் ஆதரவுடன்
நாங்கள்!
எங்களுடன்
நீங்கள்!
நீங்கள் இல்லாமல்
நாங்கள் இல்லை!
5000 € பெறுமதியான
பரிசுப் பொருட்கள் முதல் 25 பேருக்கு!!!
02.09.2017- 09.09.2017 வரை
300€ மேல் கொள்வனவு செய்வோரின்
பற்றுச்சீட்டை 09.09.2017 அன்று மாலை
07.30 மணிக்கு குலுக்கல் மூலம்
தெரிவு செய்யப்படும்
Design:Vettimaniy
இந்த வெள்ளி விழாவில்
எம்முடன் இணைந்து
பணியாற்றியதற்கு
உங்களுக்கு தலைசாய்த்துக்
கொள்கின்றோம்.
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund


Dortmund நகரில்
Samira Travels
உலகின் எப்பாகங்களுக்கும் தரமான
விமானச் சேவைகளை தெரிவுசெய்து
சிறப்பு விலையில் தருகிறோம்
BEST PRICE
Sept,oct,Nove மாதங்களில்
ab 589€
Frankfurt-Colombo
Airline Tickets
Tel:01741925169
விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்ல
வாகன ஒழுங்கள் செய்து தரப்படும்.
Design:Vettimaniy
Westerbleich Str.77-
44147 Dortmund
Tel:01741925169

## இனி நினைவுகளை எடிட் செய்ய முடியும்!



நம் மூளையிலுள்ள மோசமான நினைவுகளை அகற்றினால் நம் சோகம் குறையும் என நம்புகிறீர்களா? PTSD எனும் மன அழுத்தம் குறைக்கச் செய்யும் புதிய மருத்துவ சிகிச்சையை தற்போது ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கொலம்பியா பல்கலைக்கழக மருத்துவ மையம் மற்றும் மெக்கில் பல்கலைக்கழகம் இணைந்து அப்லைசியா எனும் கடல் நத்தையின் நியூரானை ஆராய்ந்தபோது, பதட்டம் ஏற்படுத்தும் நினைவுகளை எளிதாக அழிக்கலாம் என கண்டறிந்துள்ளனர். ஒரு நாய் குரைப்பது, சூடான பொருளைத் தொடுவது, வன்முறை ஆகிய சம்பவங்களை நரம்பணுக்கள் தாமாகவே பதிவு செய்கின்றன.

"நீங்கள் வன்முறைச் சம்பவங்கள் நிகழும் பகுதியில் நடந்து செல்கிறீர்கள் என்றால் அங்குள்ள தபால் பெட்டியைப் பார்க்கும்போது உங்களுடைய உறவினர்களுக்கு அச்சம்பவம் குறித்து தகவல் தெரிவிக்கும் எண்ணம் சடாரென தோன்றும். எதிர்காலத்தில் நமக்கு பாதிப்பு ஏற்படுத்தாத, பாதிப்பை தவிர்க்கும் முடிவுகளை எடுக்கவைக்கும் நினைவுகளைத் தவிர பிறவற்றை நம் மூளையிலிருந்து நீக்கவிட முடியும்" என்கிறார் ஆராய்ச்சியாளரான சாமுவேல் சாச்சார். மூளையின் சம்பவம் குறித்த நிகழ்ச்சிகளுக்கும், பிற நினைவுகளுக்குமான தொடர்பு குறித்து இன்னும் ஆராய்ச்சியாளர்கள் தொடர்கின்றன.

இவை வெற்றி பெறும்போது மனிதன் துன்பத்தை மறக்க இனி மதுவை நாடத்தேவை இல்லை.
காதல் பிரிவுகளால் தற்கொலைகள் குறையும். எதிர்காலத்தில் காதல் என்று ஒன்று இருக்குமா?




வெற்றிமணி 1955 ஆண்டு இதழில் நேயர் குரல் பகுதிக்கான சித்திரம் இது



நான் மறந்தாலும் வெற்றிமணி என்னை மறப்பதில்லை. எந்தவித முன்னறிவித்தலுமின்றி மாதாமாதம் தவறாது எனது தபால் பெட்டிக்குள் வந்திருந்து என்னை மகிழ்விக்கும்.
ஒவ்வொரு மாதமும் 3 வெற்றிமணிகள் கிடைக்கும். எனது வீட்டில் ஒன்று இருக்கும். மற்றைய இரண்டும் எனது நகரில் தமிழர்களிடையே வலம் வரும்.
நான் நன்றி சொல்லக் கூட மறந்திருப்பேன். சிவகுமாரன் அதை எனக்கு அனுப்பி வைக்க மறப்பதில்லை.
சந்திரவதனா



250 மாதங்களின் இடைவிடாப் பணியில்
திழைத்திட்ட மணியே உன்
பிறப்பிடத்தில் மிளிர்ந்து வரும் மிதமிஞ்சிய பணியே
வரட்சியற்ற வனப்புகளால் கனிந்து வந்த கனியே உன்
கரம் தொட்டவுடன் தகவல்களை ஏந்திநிற்கும் முறையே
விரையும் தொழில்நுட்பத்தில் விளைந்து வரும் துணிவே
உன் வெற்றிகளைத் தொட்டுவிடும் உயர்வு
பெற்றுவிடு வெற்றிமணியே!
கௌசி



தரணியில் வெளிவரும் தமிழ் இதழ்களுள் வெற்றிமணி நீண்ட நெடிய ஆயுளை கொண்டதோடு தற்போதும் புது பொலிவுடன் மாதாந்தம் வெளியாகிக் கொண்டே இருக்கிறது. தாயக அரசியல் சர்வதேச அறிவியல் இலக்கிய நயம் பாதுகாக்க வேண்டிய வளம் இளைஞர்களுக்கான அங்கிகாரம் வாழ்வியல் சுவாரகசியம் என எல்லாத்தரப்பட்ட வாசகர்களையும் தன்னகத்தே ஈர்த்து வைத்துள்ளது.
இணையத்தினது அதீத ஈர்ப்பால் அச்சு ஊடகத்துக்கு ஆபத்து வரும் என பலரும் ஏங்கிக் கொண்டிருக்கையில் வெற்றிமணியின் பிரகாசம் வியக்கத்தக்கதே...வாழ்த்துகளுடன்
– நெடுந்தீவு முகிலன்




# மூலை இருக்கை





**ஏலையா க.முருகதாசன்**

தமிழர்களிடம் ஒரு பழக்கமுண்டு.
தமிழர்களின் பழக்க வழக்கங்கள் சரியில்லை என்று தம்மைத்தாமே குறை சொல்லும் தாழ்வு மனப்பான்மைதான் அது.

அதிலும் வெள்ளைக்கார நண்பர்களை வைத்திருக்கும் பெரும்பான்மையான தமிழர்கள் தமது நண்பர்களிடமே தங்கள் சமூகத்தின் பழக்க வழங்கள் ஒன்றுமே சரியில்லை உங்களுடைய பழக்க வழக்கங்கள்தான் சிறந்தது என எவ்வித கூச்சமுமின்றி சொல்வதுதான் மிகக் கேவலமான செயல்.
கையால் சாப்பிடுவது தமிழர்கள் மட்டுமல்ல பல ஆசிய நாட்டவர்களிடமும் ஐரோப்பிய நாட்டவர்களிடமும்கூட இருக்கின்றது.கரண்டியால் சாப்பிடுவது ஏதோ ஒரு காரணத்தினால் நடைமுறைக்கு வந்ததேயன்றி அதுதான் உயர்ந்த பழக்கம் என்று சொல்லிவிட முடியாது.

தமிழர்களே நாகரிகமற்றவர்கள் என்ற நினைப்பும் தாழ்வுமனப்பான்மையும் இருப்பதும் தமது பழக்க வழக்கங்களில் உள்ள விஞ்ஞான அணுகுமுறைகளையோ அல்லது சுகாதாரத் தன்மையையோ மற்றவர்களுக்கு எடுத்துரைப்பது இல்லை.குந்தியிருந்து மலம் கழிப்பது உடலியல் ரீதியில் மல வாசலுக்கும் குடலுக்கும் ஆரோக்கியமானது என்பதை வெளிநாட்டு மருத்துவ அறிஞர் சொன்னதன் பின் ஆகா பார்த்தீர்களா எனப் பெருமை கொள்கிறோம்.
நான் அடிக்கடி புகையிரதத்திலும் பேருந்திலும் பிரயாணம் செய்வதுண்டு. அப்பொழுதெல்லாம் மூலை இருக்கை யன்னலோடு இருக்கின்றதா எனப் பார்த்து உட்காருவதுண்டு. தாயகத்தில் இருந்த போது எம்மவர்களின் நீண்டதூரப் பிரயாணமான கொழும்புப் பிரயாணத்தின் போது மூலை இருக்கையைத் தேடித்தான் உட்காருவதுண்டு. யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிப்பவருக்கு அவருக்கான மூலை இருக்கைக்காக காங்கேசன்துறை புகையிரத நிலையத்திலிருந்து ஒருவர் அவருக்காக மூலை இருக்கையில் உட்கார்ந்து வருவார்.இதை எம்மவர்கள் குறை சொல்வதுவண்டு. இது சரியா பிழையா என்பதற்கப்பால் மூலை இருக்கையைத் தேடி உட்காரும் பழக்கம் வெள்ளைக்காரர்களிடமும் உண்டு. இதனை நான் எனது பிரயாணத்தின் போது கண்டிருக்கிறேன்.

புகையிரதத்தில் பிந்தி ஏறும் நேரங்களில் நான் மூலை இருக்கையைத் தேடிச் செல்லும் போது எல்லா மூலை இருக்கையிலும் பயணி ஒருவர் இருப்பார்.எனவே எதற்கெடுத்தாலும்" என்ன இருந்தாலும் வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன்தான் "என்று சொல்வதையும் அதிலும் எம்மைப் பற்றி தாழ்வாக வெள்ளைக்காரர்களிடம் கூறுவதை நிறுத்திக் கொள்வோம். தமிழர்களிடம் மிதமான தாழ்வுமனப்பான்மை உண்டு. மற்றைய இனத்தவர்கள் எப்பொழுதும் தம்மை உயர்வாகவே மற்றவர்களிடம் கதைப்பார்கள்.

## வெற்றிமணி வரவிற்கு கிடைத்த வரங்கள்.

28 ம் பக்கத் தொடர்ச்சி....

எனது தந்தையாரின் நெருங்கிய நண்பரும் வெற்றிமணி யேர்மனியில் ஆரம்பிக்கும் போது ஆலோசனைகள் வழங்கியது மட்டுமன்றி பல இலக்கிய கட்டுரைகளையும் எழுதி எனக்கு உற்சாகம் தந்த கவிஞர் வி.கந்தவனம் அவர்களது ஆசியையும் கிடைக்கப் பெற்றேன்.




இத்தனை ஆசிகளுக்கு மத்தியில் நான் பிறந்து வளர்ந்த எனது ஊரான குரும்பசிட்டிக்கு சென்று, எனது வீட்டின் வாசலில் நின்று வெற்றிமணி வாசித்து என் தந்தைக்கு அர்ப்பணித்தேன்.

அந்த வீடு 1992 முதல் இரணுவக்கட்டுப்பாட்டுகள்குள் உள்ளது. எனது இல்லத்திற்கு எதிர்புறம் விடுவிக்கப்பட்டுவிட்டது. ஆனால் எனது வீடு இன்றும் இராணுவக் கம்பி வேலிக்குள் உள்ளது. பார்க்கலாம் நான் போக முடியாது. வீட்டு முற்றம் தெரிகிறது, எனது தந்தையார் வெற்றிமணி தயாரித்த அறையும் தெரிகிறது. ஓவ் வொரு வெள்ளியும் ஓதுவார் மூர்த்தி சிவசுப்பிமணியம் வந்து தேவாரவகுப்பு நடத்திய முன் அறை தெரிகிறது. பரதநாட்டிய வகுப்புகள் நடை பெற்ற முற்றம் தெரிகிறது.

ஆனால் அவற்றிற்கு முன்னால் இராணுவக் கம்பிவேலி இப்போ பெரிதாகத் தெரிகிறது.
என் தந்தை சுவாசித்த இல்லத்தின் முன் நின்று வெற்றிமணியை வாசித்துவிட்டு திரும்பினேன்.

**சில செயல்கள் வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் அச்செயல்கள்தான் உலகில் பாதி மனிதர்களது இதயம் வெடிக்காமல், இருக்க உதவும் வடிகாலாக இருக்கிறது என்பது உண்மை.**
**புலம் பெயர் நாடு ஒன்றில் 250 மணிகளைக் கோர்த்து வெற்றிமணி யினை அழகுபார்க்க. அதன் வளர்ச்சிக்கு பின்னால் ஒலித்த ஒவ்வொரு மணிகளுக்கும் நன்றிகள்.**





ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
Westendorf Str.41 - 44287 Dortmund
SALE
Aug.Sale
ஆவணி மாத மலிவு விற்பனை
எமது மலிவு விலைகளை அறிந்துகொள்ள
Web :www.milinimpex.de
Web :www.milinimpex.de
Tel: 0231 45 96 17
info@milinimpex.de
எமது நிறுவனம்
Mo-Sa 10.00-இருந்து 18.00 வரை
உங்களுக்காகத் திறந்திருக்கும்




பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

# காலா கரிகாலனில் அரசியல் தூக்கலாக இருக்கும்

சூப்பர் ஸ்டார் ரஜினியின் நடிப்பில் பா.ரஞ்சித் இயக்கத்தில் மிக வேகமாக வளர்ந்து வருகிறது காலா. மிகவும் எதிர்பார்ப்புக்குள்ளாகி இருக்கும் காலா படத்தில் ரஜினிக்கு ஜோடியாக முதலில் இந்தி நடிகை ஹூமா குரேஷி நடிப்பதாக சொல்லப்பட்டது. ஆனால் அவர் படத்தில் ஒரு வேடத்தில் நடிக்கிறார். ஆனால் ரஜினிக்கு ஜோடி ஈஸ்வரி ராவ் என்று செய்தி வந்துவிட்டது.

இப்போது கிடைத்துள்ள செய்திபடி ஹூமா குரேஷி பாலியல் தொழிலாளியாக ஒரு கனமான பாத்திரத்தில் நடிக்கிறாராம். கபாலியை விட காலாவில் அரசியல் தூக்கலாக இருக்கும் என்கிறார்கள். வசனங்கள் பல்வேறு சர்ச்சைகளை கிளப்புமாம். எல்லாம் ரஜினி அனுமதியுடன்தான் வைக்கப்பட்டிருக்கிறதாம். இது ரஜினியின் இறுதிப்படமாக இருக்கலாம். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நடித்த மதுரையைமீட்ட சுந்தரபாண்டியன் இறுதிப்படம்.ரஜினிக்கு காலா கரிகாலன் இறுதிப்படம். கரிகாலன் சுந்தரபாண்டியன் தானா இப்படி அமைந்ததா?












# ஜெயம் ரவியின் விண்வெளிப் பயணம்

தனி ஒருவன், பூலோகம், மிருதன், போகன், வன மகன் என படத்திற்கு படம் வித்தியாசம் காட்டி ரசிகர்களை கவர்ந்து வருபவர் நடிகர் ஜெயம் ரவி. இவர் தற்போது விண்வெளி வீரராக நடித்திருக்கும் படம் டிக் டிக் டிக்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் 22.07.2017 வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்டவுடன் அவரது ரசிகர்கள் இதனை பெரிய அளவில் வரவேற்றதுடன் இணையத்தில் 'வைரலாக்கி உச்சத்தில் வைத்திருக்கின்றனர்.

இதனை நாய்கள் ஜாக்கிரதை, மிருதன் படத்தினை இயக்கிய சக்தி சௌந்தர்ராஜன் இயக்கியிருக்கிறார். இவருடன் நிவேதா பெத்துராஜ், ஆரோன் அஜிஸ் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். தமிழ் சினிமாவில் விண்வெளியைச் சார்ந்த திரைக்கதையில் வெளியாகும் முதல் படம் என்ற பெருமையும் இப்படம் பெற்றிருக்கிறது. டிக் டிக் டிக்

சூர்யா நடித்துள்ள தானா சேர்ந்த கூட்டம் படத்தின் இரண்டாவது போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது. விக்னேஷ் சிவன் இயக்கத்தில் சூர்யா நடித்துள்ள படம் தானா சேர்ந்த கூட்டம். அவருக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடித்துள்ளார். நகைச்சுவை நடிகர் செந்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை பிறந்த நாளான 23.07.2017 இல் வெளியிட்டார்




# கொடி பறக்கிறது

தனுஷ் நடிகராக அறிமுகமாகி, தன்னடைய அயராத உழைப்பால் தமிழ் ரசிகர்களுக்கு பிடித்தமானவராக உயர்ந்தவர். இவரது உயரத்திற்கு கீரிடம் வைத்தாற்போல் அமைந்திருக்கிறது ஹொலிவூட் படம். "த எக்ஸ்ட்ராடினரி ஜேர்னி ஆஃப் த பஃகீர் " என்று பெயரிடப்பட்டுள்ள அப்படத்தில் கதையின் நாயகனாக நடித்திருக்கிறார். தன்னுடைய தந்தையைக் காண்பதற்காக இந்தியாவிலிருந்து பிரான்ஸ் நாட்டிற்கு சென்று தேடுகிறான். அங்கு அவன் தன்னுடைய தந்தையை கண்டுபிடித்தாரா? இல்லையா? என்பதே படத்தின் கதை. இந்த கதையில் தனுஷ் உடன் ஹொலிவூட் நடிகையான எரின் மொரியார்ரி, அத்துடன் முன்னணி நடிகரான பக்தாத் அப்டீயும் ஒரு முக்கிய கேரக்டரில் நடித்திருக்கிறார். கனேடிய திரைக்கதையாசிரியர் . இயக்குநர் மற்றும் தயாரிப்பாளரான கென் ஸ்காட் இதனை இயக்கியிருக்கிறார். அண்மையில் இப்படத்திற்கான படப்பிடிப்பு பாரீஸில் முடிவடைந்தது. இதனைக் கொண்டாடும் வகையில் பாரீஸின் அடையாளமான ஈபின் டவர் மீதேறி அங்கிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து தன்னுடைய ட்வீட்டரில் போட்டிருக்கிறார்.






Hückelhoven நகரில்

துரித பணமாற்றுச் சேவை

**Asiatischer Super markt**

12.08.2017 சனிக்கிழமை

ஆசியா சமுத்திரம்

கேவலார் அன்னை மரியாவின் திருப்பூசை வளாகத்தில் எமது

மாபெரும் மலிவு விற்பனை!

பசுமையான மரக்கறிகள் கடல் உணவுப் பொருட்கள் - மளிகைப்பொருட்கள் அனைத்தும் மலிவாகவும் கிடைக்கும்.







Lyca TV

TEMPO Money Transfer

VALUTRANS Money Transfer

Ria Money Transfer

MoneyGram money transfer

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan


Rathy Jewellers Ltd
The Leading Jewellery store in London with the largest selections
அதிக தேர்வுடன் கூடிய, லண்டனில் முன்னணியில் திகழும் நகைமாளிகை ரதி!
28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063
Opening Hours
Mon-Sat 10.00 am to 6.30 pm
Sun 12.00 to 6.30 pm
எமது புதிய கிளை
UNIT 6
Plaza Parade29-33
Ealing road
Wembley HA0 4 YA
Tel: 0208 9000 818


உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS
இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com


புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்
Jasmine Silk House
காஞ்சிபுரம் நம்பர் 1 பட்டு
சாறிகள் நம்மிடம் கிடைக்கும்
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Tel:02102 844744


ASIA BAZAR
Ria
Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
VALUTRANS
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282
உரிமையாளர்:
பா.கணேஷ்


வீட்டுக்கடன்
1,2%
வட்டிவீதத்திலிருந்து
நீங்கள் புதிய மனை
அமைக்கவோ, கடன் பெறவோ,
எதுவானாலும் உடனடி உதவி
எங்களிடம் உண்டு
தற்போதைய வீட்டுக்கடனை
அல்லது (தனிநபர்)கடனை
குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"
தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365 0152/53961138
0231/10876361
Th. Gobinath


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
சரவணபவன்
SARAVANAA BHAVAN
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Tilda
Kipper Str.3 44147 Dortmund Germany